
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**LIFT UP A STANDARD FOR THE PEOPLE**
**Isaiah 62:10**

**Translated from**
**BS#941**
**Mar-April 2024**

**பொருளடக்கம்**

✡ இயேசுவின் பாத்திரம் ...................... 2

✡ உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது .................................. 11

✡ வேதாகமம் பேசுகிறது ...................... 17


BS Tamil Version - 83 2024

# இயேசுவின் பாத்திரம்

Jesus' Cup

**''பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?'' (யோவான் 18:11 ).**

நம்முடைய ஆண்டவர் தாம் கைது செய்யப்பட்ட உடனேயே இந்த வார்த்தைகளைக் கூறினார். இயேசுவைக் கைது செய்ய வரும் போது அவருடைய சீஷர்கள் தங்களுடைய கரங்களில் வைத்திருக்க வேண்டுமென்று அவர் விரும்பிய இரண்டு பட்டயங்களில் ஒன்று பேதுருவின் கரத்தில் இருந்தது, எனினும் இயேசு தம்முடைய விடுதலைக்காக அவர்கள் எந்த வன்முறை-யையும் செயல்படுத்த விரும்பவில்லை என்பதையும், கைது செய்யப்படுவதற்கும் மரணத்திற்கும் அவர் தன்னை ஒப்புக்கொடுப்பது அவரது பங்கில் முற்றிலும் தானாகவே மனமுவந்து செய்வது என்பதையும் நிரூபிக்கவே விரும்பினார் (யோவான் 10:18). எஜமானர் மீதான பேதுருவின் சமச்சீரற்ற அன்பும், வைராக்கியமும் அவருடைய பாதுகாப்பிற்காகவும், அவரது விடுதலைக் காகவும் வன்முறையைப் பயன்படுத்தவும் அவனைத் தூண்டியது. ஒரு மீனவனாக பேதுருவுக்கிருந்த திறமை சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு போர்வீரனாக அவருக்-கிருந்த திறனை விட அதிகமாக இருந்தது; ஏனென்றால் அவரைக் கைது செய்ய வந்தவர்களில் ஒருவனும், பிரதான ஆசாரியனின் வேலைக்காரனுமாகிய மல்குஸ் என்பவனை தனது பட்டயத்தால் போர் வீரனின் தாக்குதலைப் போலல்லாமல் விகாரமாக தாக்கி, அவனைக் கொல்வ-தற்குப் பதிலாக, காதை வெட்டினான்! இருப்பினும், தமது சார்பாக, அவர் எந்த வன்முறையையும் ஏற்கவில்லை என்பதையும், கைதாவதற்கு அவர் முற்றிலும் தானாகவே ஒப்புக்கொடுத்தார் என்பதையும் நிரூபிக்க இயேசுவுக்கு வாய்ப்பளிக்க அவனது செயல் போதுமானதாக இருந்தது. இப்படிப்பட்ட ஆதாரத்தைக் கொடுப்பதற்கான இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அவர் அவனைக் கடிந்து கொண்டார். மேலும் அவன் பட்டயத்தை அவனுடைய உறைக்குள் போடும்படி கட்டளையிட்டார், மேலும் பிரதிஷ்டை செய்தவர்கள் தங்கள் சொந்த உயிரை பணயம் வைத்து மரணத்தை எதிர்கொள்ள வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது என்று அவனையும் அவருக்கு சொந்தமானவர் களையும் எச்சரித்தார். (மத். 26:52). அவர் பேதுருவின் செயலில் ஒரு நல்ல எண்ணத்தை கண்டார், ஆனால் அது தேவன் வடிவமைத்திருந்த அனுபவங்களின் கீழாக செல்வதிலிருந்து அவரைக் காப்பாற்றுவதற்கான தவறான முயற்சியாக இருந்தது. எனவே, இந்த முயற்சிக்கு எதிரான தனது வார்த்தையினை இவ்வாறு வெளிப்படுத்தினார், **''பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்-பண்ணாதிருப்பேனோ?''** இந்த வெளிப்பாடு துணிவான பேதுருவை அமைதிப்படுத்த போதுமானதாக இருந்தது, அவர் தனது ஆண்டவரின் பாதுகாப்பிற்காகவும் விடுதலைக் காகவும் வன்முறையில் ஈடுபடுவதை நிறுத்தினார், எனினும் விரைவில் பேதுரு மற்றவர்களுடன் சேர்ந்து, உடன் ஒத்துணர்வு கொள்பவர்கள் இல்லாமல், இயேசுவை ஆபத்தான சூழலில் தனியாக விட்டுவிட்டு தப்பி ஓடினார். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் கிறிஸ்துவை மூன்று முறை மறுதலித்ததின் மூலம் குற்றவுணர்வுடையவரானார், அவரின் இந்த இரண்டு செயல்களும், பல ஆண்டுகளுக்குப் பின் அந்தியோகியாவில் அவருடைய போக்கும், அவரில் உள்ள ஒரு தைரியமான ஆவியோடுக்கூட, ஒரு சாதாரண மனிதனாக அவரது குணத்தில் ஒரு கோழைத்தனத்தையும் கொண்டிருந்தார் என்பதை நிரூபிக்கிறது.




வேதாகம அடையாளங்களில் பாத்திரங்கள் பல்வேறு அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் ஒன்று வாய்க்கருவியாக அல்லது வாய் கருவியின் உத்தியோகமாக இருக்கிறது. இது யோசேப்பினுடைய அடையாளமான பாத்திரத்தின் மூலம், அவர் முன்னறிவித்தது தெளிவாகத் தெரிகிறது (ஆதி. 44:2,5,15). பாபிலோன் கர்த்தருடைய கையிலுள்ள பொற்பாத்திரம் என்ற எரேமியாவின் (51:7) கூற்றிலிருந்தும் இது தெளிவாகிறது, அதாவது, சுவிசேஷ யுகத்தின் போது, அதன் அறுவடை காலம் வரை தேவன் அவளைப் பயன்படுத்தினார், அதாவது அதன் அங்கத் தினர்களில், குறிப்பாக அதன் புது சிருஷ்டி அங்கத்தினர்கள், இன்னும் குறிப்பாக அதன் சிறுமந்தை அங்கத்தினர்கள்

COURTESY BY :
THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

மூலம், இன்னும் குறிப்பாக அதன் நட்சத்திர அங்கத்தினர்கள் மற்றும் அவர்களின் சிறப்பு உதவியாளர்கள் மூலம், தேவன் உலகத்துடன் பேசினார். தேவனுடைய கரமாக இயேசு அவளை அத்தகைய வாய்க்கருவியாக பயன் படுத்தினார் என்ற அர்த்தத்தில் அது கர்த்தரின் கரத்தில் இருந்தது. வாய்க்கருவியின் உத்தியோகம் என்பது வார்த்தையின் அர்த்தத்தில் பாத்திரம் என்று வெளி. 17:4-ல் உள்ளது. இந்த வேத பகுதியில், பாபிலோனானது, உடைமை, அதிகாரம் மற்றும் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்த ஒரு ஸ்திரீயாக அடையாளமாக கீழே காட்டப்பட்டுள்ளது. அதாவது, அவள் இந்த உத்தியோகத்தை அல்லது ஏதோ ஒரு வழியில் வாய்க்கருவியாக இருக்கும் அதிகாரத்தை, அரசாங்கத்துடன் கொண்ட முறைகேடான ஐக்கியத்தின் மூலம், தேவனை தூஷிக்கும் வகையில் எல்லாவிதமான பொல்லாத போதனைகள் மற்றும் பழக்கவழக்கங்களை உள்ளடக்கியதாய் அவளது உத்தியோகத்தை தவறான முறையில் பயன்படுத்தினாள்.

வேதாகம அடையாளங்களில் உள்ள இந்த வார்த்தையானது 'அனுபவங்களை' அடையாளப்படுத்தவும், சில நேரங்களில் 'சந்தோஷமான அனுபவங் களையும்,' சில நேரங்களில் 'துயரமான அனுபவங் களையும்,' சில நேரங்களில் இரண்டின் கலவையான அனுபவங்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சந்தோஷமான அனுபவங்கள் சங். 16:5-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன, இதில் இயேசு, தேவனுடைய பாத்திரத்தின் முக்கிய பகுதியாக இருப்பதைப் பற்றி தீர்க்கதரிசனமாக கூறப்பட்டதிலிருந்து அவர் தனது உயர்ந்த சிலாக்கியத்தையும் மகிழ்ச்சியையும் விவரிக்கிறார். நிச்சயமாக, ஒருவர் தேவனைப் பிரதானமாகக் கொண்டிருப்பது மேலான மகிழ்ச்சியானதாகவும் மகிமை நிறைந்த தாகவும் இருக்கிறது. எரே.16:7-ல் அவிசுவாசிகளிடமிருந்து தேவன் அகற்றும் 'தேற்றரவின் பாத்திரத்தைப்' பற்றி பேசும்போது இந்த எண்ணத்தையும் நமக்குத் தருகிறார்; உபத்திரவங்கள் இருந்தாலும் மகிழ்ச்சியைத் தவிர வேறு என்ன ஆறுதல்? மற்றொரு அர்த்தத்தில், ஒரு பாத்திரம், துயரத்தின் அனுபவங்களைக் குறிக்கிறது. இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்திய சில வசனங்களில் இது தெளிவாகத் தெரிகிறது, உதாரணமாக: ராஜ்யத்தில் யோவான் மற்றும் யாக்கோபு (மத். 20:21-23) ஆகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் அவருடைய வலது பாரிசத்திலும், மற்றொருவன் அவருடைய இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி கேட்ட போது, இயேசு இவ்வாறு பதிலளித்தார், "**நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கக் கூடுமா?**" [இதை நான் குடிக்கிறேன் மாற். 10:38]. மாற்கு வேத பகுதியில் இயேசு, யோர்தான் அனுபவத்திற்குப் பிறகு அனுபவித்த துயரமான அனுபவங்களையும், மத்தேயுவிலுள்ள வேத பகுதியில் அவர் தனது வாழ்க்கையின் கடைசி மணிநேரங்களில் பங்கேற்கவிருந்த துயரமான அனுபவங்களையும் குறிப்பிட்டார். அவர்களால் அவ்வாறு செய்ய இயலும் என்றும் அதற்கு விருப்பமாக இருப்பதாகவும் அவர்கள் பதிலளித்தபோது, மரணம் வரையிலான அவர்களின் விசுவாச உண்மைத்துவத்தை முன்னறிந்த இயேசு, தற்போதைய உபத்திரவங்களில் தம்முடைய பங்காளிகளாக உண்மையாய் இருந்ததால், அவர் அனுபவித்த மற்றும் அவர்கள் இதுவரை அனுபவிக்காத பாடுகளை அனுபவிப்பார்கள் என்று கூறினார். இந்த வேத பகுதிகளில் உள்ள பாத்திரம் என்பது துயரமான அனுபவங்களைக் குறிக்கிறது. மேலும் இது இறுதியாக இரண்டு வகையான அனுபவங்களான, சந்தோஷமான மற்றும் துக்ககரமான அனுபவங்களின் கலவையான அனுபவங்களைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அனுபவத்தின் சிறிய பகுதி மிகவும் கசப்பான பானத்தாலும், அதன் பெரிய பகுதி மிகவும் இனிப்பான பானத்தாலும் நிரப்பப்பட்டதாக உள்ள ஒரு பாத்திரத்தின் மூலம் நாம் விளக்கலாம். பொதுவாக பிரதிஷ்டையாளர்களின் உதடுகள் மிகவும் இனிப்பான பானத்தால் நிரப்பப்பட்ட பாத்திரத்தில் அருந்துகின்றனர்; ஆனால் சில வேளைகளில் அவர்களின் உதடுகளினால் மிகவும் கசப்பான பானத்தால் நிரப்பப்பட்ட பகுதியை அருந்துகின்றனர். மேலும் அது அவர்களின் அடையாளமான உதடுகளை சுருக்கி மடிக்கும் அளவுக்கு மிகவும் கசப்பானது. மத். 26:39,42-ல், குறிப்பிட்டுள்ள பாத்திரத்தில், இயேசு தனக்கு முன் இருந்த துயரமான அனுபவங்களைப் பற்றி குறிப்பிடுகிறார். அது பிதாவின் சித்தமாக இருந்தால், அந்தப் பாத்திரம் நீங்கும்படியாக ஒரு மணிநேரம் ஜெபித்தார். சங். 23:5-ல், என் பாத்திரம் நிரம்பி வழிகிறது என்ற வசனத்தில் பாத்திரம் என்ற வார்த்தையானது, இரண்டு உணர்வுகளின் கலவையில் பயன்படுத்தப்படுகிறது; ஏனெனில் கிறிஸ்து வகுப்பாரின் அனுபவங்கள் இரண்டு வகையானது, சில சமயங்களில் மிகவும் சந்தோஷமானதாகவும், சில சமயங் களில் மிகவும் துயரமாகவும் இருந்தது. தலையானவருக்கும் அனுபவங்கள் அப்படித்தான் இருந்தது; பாத வகுப்பார் உட்பட முழு சரீரத்துக்கும் அவை அப்படியே உள்ளது. மற்றொரு பகுதியில் (சங். 116:13) இரண்டு அர்த்தத்தில் இது பயன்படுத்தப்படுகிறது: "**இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு,**" அதாவது, கர்த்தருடைய ஜனங்கள் இப்போது தங்கள் இரட்சிப்பை உண்மையுள்ள இருதயத்தில் பெறுவதில் தொடர்புடைய சந்தோஷமான மற்றும் துயரமான



அனுபவங்களை ஏற்றுக்கொள்வதற்கு பொருத்தனை செய்கிறார்கள்.

## நமது பாடத்தின் தலைப்பு வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாத்திரத்தின் பொருள்

**"பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?"** என்ற வசனத்திலுள்ள "பாத்திரம்" நமது பாடத்தின் தலைப்பு வாக்கியத்தில் எந்த அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது? இது மகிழ்ச்சியான அனுபவங்களைக் குறிக்கவில்லை, இல்லையெனில் அவர் அவற்றை நீங்கும்படி செய்யும் என்று கேட்டிருக்கமாட்டார். மேலும் யோர்தானிலிருந்து கெத்செமனே வரையில் அவருக்கு சம்பவித்த துயரமான அனுபவங்களை பற்றி அவர் குறிப்பிடாமல், **"நான் பானம்பண்ணாதிருப் பேனோ?"**என்று இந்த வசனத்தில் எதிர்காலத்தை குறிப்பிடும்படியாக கூறுகிறார், அவர் இங்கு மரணத்தை பற்றியும் குறிப்பிடவில்லை; மாறாக நமது ஆண்டவர் மனுஷனுக்காக மீட்கும் பலியாக மரிப்பதற்கு மிகவும் விருப்பமுள்ளவராகவும், தனிமையில் ஒரு மணி நேரமளவும் பலிபீடத்திலிருந்து தன்னை விலக்கிக் கொள்ளவோ அல்லது அதிலிருந்து விடுதலைக்காகவோ வேண்டிக்கொள்ளவோ இல்லை. எனவே, அது மரணத்தை விட மேலான வேறொன்றாக இருந்திருக்க வேண்டும், எனவே இதிலிருந்து காப்பாற்றப்படுவதற்காகவே அவர் உரத்த சத்தத்துடனும் வேதனையான கண்ணீருடனும் மற்றும் இரத்தம் கலந்த வியர்வையுடனும் மிகவும் ஆர்வத்துடன் ஜெபித்தார். இங்கே குறிப்பிடப்பட்ட பாத்திரம் மரணம் இல்லை என்றால், ஏதோ அவரது மரணத்துடன் தொடர்புடைய ஒன்று அந்த பாத்திரத்தில் இருந்திருக்க வேண்டும். ஏற்படுத்தப்பட்ட அந்த பாத்திரம் அவரது மரணத்துடன் தொடர்புடைய மற்றும் அதனுடன் இணைந்த விசேஷமான துன்ப அனுபவங்களாக இருந்திருக்க வேண்டும். அந்த மரணத்துடன் அவமானம் மற்றும் நிந்தை இருந்தது, இது இல்லாமல்கூட அவர் மரித்திருக்க முடியும், மேலும் அவைகள் இல்லாமலேயே அவர் நம் அனைவரையும் மீட்கும் பலியாக ஆகியிருக்க முடியும். இன்னும் கொஞ்சம் விசேஷமாக ஆராய்ந்தால், அவர் மதம் சார்ந்த நீதிமன்றத்தால் மரணத்திற்கேதுவான அவமானம் மற்றும் நிந்தையை ஏற்படுத்தி, தேவதூஷணக்காரர் என்றும் மதச்சார்பற்ற நீதிமன்றத்தால் சட்டவிரோதமான ஒரு கிளர்ச்சியாளர் என்று புறக்கணிக்கப்பட்டவராகவும் தீர்க்கப்பட்டார். அவர் இப்படிப்பட்ட அனுபவங்களை அனுபவிக்காமலேயே மரித்திருக்கலாம்; அவருடைய மரணம் இந்த தனித்தன்மையைக் கொண்டிருந்தது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். இவை இரண்டு அனுபவங்களில் எதுவும் சிறிய விஷயமல்ல; ஏனென்றால், முதலாவது அனுபவப்படி யூதர்களைப் பொறுத்தவரையில், அவர் இனி தேவனுடைய ஜனங்களின் கூட்டத்தில் ஒரு அங்கத்தினராக இருக்க முடியாது என்றும், அவர் இஸ்ரயேலர்களின் நம்பிக்கையான – மரித்தோரின் உயிர்த்தெழுதலில் பங்குகொள்ளாமல் என்றென்றும் மரித்திருப்பார் என்றே நினைத்தனர்; மேலும் அடுத்ததான மதச்சார்பற்ற தீர்ப்பின்படி புறஜாதியாரைப் பொறுத்த–வரையில், அவர் மரணத்திற்குப் பிறகு நித்திய வேதனைக்கு ஆளானார் என்றே நினைத்தனர், மேலும் யூதருக்கும் புறஜாதிக்கும் ஆகிய இரண்டுக்கும் அவர் ஒரு எச்சரிப்பின் உதாரணமாக ஆக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிட்டு காட்டுகிறது. அதனால் இயேசுவின் விஷயத்தில் அவருக்கு நிகழ்ந்ததை மற்றவர்கள் கண்டு பயந்து, அத்தகைய பேரழிவுகளை விளைவிக்கும் ஒரு பாதையைப் பின்தொடர்–வதிலிருந்து விலகிவிடுவார்கள்.

இந்த இரண்டு தீமைகளைப்பற்றிய ஆய்வானது மேலே கொடுக்கப்பட்டதை விட நெருக்கமான ஆய்வுக்கு தகுதியானது. யூதர்களைப் பொறுத்தவரையில், புறக்கணிக்கப்பட்டவராக மரிப்பது என்பது எல்லா தீமைகளுக்கும் மேலானது. அவருடைய மரணம், ஒரு எச்சரிக்கையான உதாரணமாக ஆக்கப்படுவதால், பிரமாணத்தால் பரிந்துரைக்கப்பட்ட தீவிரமான தண்டனையை சகிக்க வேண்டியிருந்தது – யூதர்கள் மத்தியில் மரத்தில் தூக்கப்படுவதன் மூலம் ஏற்படும் மரணம், சிலுவையில் அறையப்படுவதைக் குறிக்கவில்லை, மாறாக, தூக்கிலிடப்படுவதை, அதாவது தொண்டை மற்றும் கழுத்தில் கயிற்றால் கட்டப்பட்டு, அதனால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு, ஒரு மரத்தில் தொங்க விடப்படுவதால் அவரது சொந்த எடையால் மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இதனால், அவன் சபிக்கப்பட்டவனாக இருப்பான் (கலா. 3:13). மேலும், ஒருவர் சபிக்கப்பட்ட நபராயிருந்தால், அதாவது இரண்டாம் மரணத்துக்குரிய நபரானால், ஜனங்கள் சிந்தனையாலும் நோக்கத்தாலும், வார்த்தையாலும், செயலாலும் அந்த நபரிடம் மனித இகழ்ச்சிகளின் எல்லையை வெளிப்படுத்த வேண்டும். ஆகையால் அந்த நபர் தேவனாலும் மனிதர்களாலும் சபிக்கப்பட்டவர் என்ற எண்ணம் உடையவர்களாயிருக்க வேண்டும். அந்த நபர் மீது மிகுந்த வெறுப்பு மற்றும் பிடித்தமற்ற உணர்வை அவர்கள் கொண்டிருக்க வேண்டும். அவர்கள் அவரைப் பற்றி அவர்கள் மொழியில் சொல்லக்கூடிய அளவுக்கு நிந்தையான, கனவீனமான மற்றும் கண்டனத்திற்குரிய விஷயங்களைக் கூற வேண்டும்; அவர்கள் கடுமையான வெறுப்பினால் அவர் மீது முகம் சுளிக்க வேண்டும்; அவர்கள் அவரை மிகவும் கொடூரமான மற்றும் வெட்கக்கேடான செயல்களால் துன்புறுத்த வேண்டும்.

இது சனகெரிப் சங்கத்தை சேர்ந்தவர்களின் காரியங்கள் மற்றும் சனகெரிப் சங்கத்தின் சிப்பாய்களைப் பற்றியது, அது இயேசுவை சமுதாயத்திலிருந்து தள்ளி வைத்து மரண தண்டனையை அறிவித்த உடனேயே, வெட்கமின்றி இவ்விதமாக அவரைத் துன்புறுத்தியது – அவரின் கண்களை மூடவும், அவர்மேல் துப்பவும், சிலர் சந்தேகத்திற்கு இடமின்றி சளியால் துப்பி, அவரை கன்னத்தில் அறையவும், அவரை உதைக்கவும்,

அவருடைய தாடி முடியையும், சந்தேகத்திற்கு இடமின்றி அவருடைய தலை முடியையும் இழுக்கவும் செய்தார்கள். (மத். 26:67; மாற். 14:65; ஏசா. 50:6). அவர் சிலுவையில் தொங்கியபோது, யூத ஜனங்கள் அவரை வெகுவாக நிந்தித்து கேலி செய்து ஏளனம் செய்தது மற்றும் பரிகாசம் செய்ததும் கணக்கிடப்படுகிறது. இந்த யுகம் முழுவதும் கூறப்படும் அவதூறான, நிந்தையான, கனவீனமான மற்றும் பொய்யான கதைகள் யூதத் தலைவர்களால் அவரில் முதலீடு செய்யப்பட்டவையாகும்; ஏனென்றால், அவரை நிந்திப்பதற்கு அவமானகரமான கதைகளைப் புனைவதற்காக அவர்கள் தங்கள் கற்பனைகளின் உச்சத்திற்கு சென்றிருக்கிறார்கள்; மேலும் கடந்த 150 ஆண்டுகள் வரை இயேசு யூத ஜனங்களின் வெறுப்பின் முக்கிய பொருளாக இருந்ததன் விளைவாக, பல நூற்றாண்டுகளாக அவரை இதுவரை வாழ்ந்தவர்களில் மிக மோசமான மனிதராக முன்னிறுத்தியுள்ளனர். இது அவரை சமுதாயத்திலிருந்து தள்ளி வைக்கப்பட்டவராக தேவதூஷணம் செய்தவராக அவர் மீது மரணத்தை கொண்டு வரும் என்பதை இயேசு அறிந்திருந்தார். இதுவே அவரை இப்படிப்பட்ட அனுபவத்திலிருந்து விடுபட மன்றாடச் செய்தது.

மேலும் புறஜாதியினரைப் பொறுத்தமட்டில், ஆவர் ஒரு கலகக்கார சட்ட விரோத நபராக சிலுவையில் அறையப் பட்டதன் மூலம் நீதித்துறையினால் விதிக்கப்பட்ட மரண தண்டனையும் மனித தீமைகளின் உச்சமாக இருந்தது; ஏனென்றால், அவமானகரமான மற்றும் நிந்தையான சிலுவையில் அறையப்பட்ட மரணத்திற்குப் பிறகு – அப்படிப் பட்ட ஒருவர் நித்திய வேதனைக்கு ஆளாக நேரிடும் என்று அவர்கள் நம்பினர் – ஆனால் தெளிவான முறையில் அல்லாமல் இருண்ட யுகங்களின் மதபோதனைகள் கற்பித்த மற்றும் இன்னும் கற்பிக்கப்படுகிறதை நம்பினார்கள், சிலுவையில் அறையப்பட்டு வெட்கக்கேடான மற்றும் அவமானகரமான மரணம் அவர்மீது சுமத்தப்பட்ட பிறகு மற்றவர்கள் அவரைப் போல் செய்தால், இதேபோன்ற முடிவுதான் அவர்களுக்கும் நேரிடும் என்ற பயத்தை தோற்றுவிக்க அவரை ஒரு எச்சரிக்கையின் உதாரணமாக ஆக்க முயன்றனர்; மற்றவர்கள் அவரைப் போல் செய்தால் கடைசியாக அத்தகைய கண்டனம் செய்யப்பட்ட கிளர்ச்சியாளரின் அனைத்து அனுபவங்களையும் தங்களால் முடிந்தவரை முக்கியமானதாக்கி, அவர்களுக்கு விளம்பரம் செய்தனர். புனிதமான மற்றும் வேதாகம பாடங்களின் படங்களை வரைவதில் சிறந்த பிரெஞ்சு கலைஞரான டிஸ்ஸோட் (Tissot) என்பவரால் ஒருவர் அடிபட்டது போல், பெரும்பாலும் பின்புறம் பகுதி மட்டுமல்லாமல், பக்கவாட்டிலும், மார்பு, வயிறு, கால்கள், கால்கள் பாதங்கள் முகத்திலும், தலையிலும் கூட, தாக்கப்பட்டதாக மிக நேர்த்தியாக வரையப்பட்டிருந்தது. அவர்களுடைய கனப்படுத்துவது போன்று பகடி செய்யும் செயல்பாடுகளின் இந்த விவரங்கள் உயர்பதவியில் உள்ள எவரும் பெற விரும்பாததாகும், இயேசுவின் காரியத்தில் அவரை ராஜ வஸ்திரங்களால் அலங்கரித்தபோது – ஒரு பழைய மங்கலான சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி, நாணல்களாலான செங்கோலைக் கொடுத்தனர். மேலும் ஒரு ராஜாவுக்கு கொடுக்கப்படுவதற்கு நேர்மாறான முரட்டுத்தனமான நடத்தையுடன் சேர்ந்து அவருக்கு கேலிக்குரிய கனத்தை வழங்கினர்; கேலியாக முழங்கால்படியிட்டு, ஏளனமாக அவரைப் புகழ்ந்து, அவர்கள் கொடுத்த அவலட்சணமான செங்கோலால் ஏளனமான முறையில் அவரை அடித்தார்கள், அவர் மீது துப்பினார்கள், கேலி செய்யும் வகையில் அவரது தலை மற்றும் நெற்றியில் குத்தி வெட்டிய முள் கிரீடத்தை அவரது தலையிலும் நெற்றியிலும் மேலும், கீழுமாக முரட்டுத்தனமாக அழுத்தி, அவரை பரிகாசம் செய்து முடிசூட்டினர். பின்னர் இது பொது ஜனத்துக்கு முன்பாக அவமானகரமான சிலுவையில் அறைவதற்கு அவர்கள் விரைந்ததற்கும், எல்லாவிதமான கொடுமைகளுடனும் அவரை சிலுவையில் அறைந்ததற்குமான விவரங்களானது – இவை அனைத்தும் பொது ஜனங்களைக் கவரும் விதமாக, செய்யப்பட்டன. இவ்வாறு செய்பவர்கள் இத்தகைய நிலைக்கு ஆளாக நேரிடும் என்ற அச்சத்தில் ஜனங்களை வைப்பதற்காகவும், இவ்வித செயல்களை செய்வதைத் தடுக்கவும் இப்படி செய்யப்பட்டது. அவர்கள் அவரை சிலுவையில் பரிகாசம் செய்ததற்கும், அவர் மரித்த பிறகும் அவரது மார்பிலும் இருதயத்திலும் குத்தி அவமானம் செய்ததுமான இந்தவிவரங்களின் காரணம், இவை அனைத்தும் நித்திய வேதனையை அனுபவிக்கும் ஒருவருக்கு கொடுப்பது சரியானது என்று அவர்கள் நினைத்ததே ஆகும். யூதர் மற்றும் புறஜாதி ஆகிய இருவரின் இந்த இரண்டு கண்ணோட்டங்களும் அவர் அனுபவிக்க ஒரே மாதிரியான பெரிய தீமைகளாக இருந்த போதிலும், இயேசு அனுபவிக்க வேண்டிய இரண்டில் யூதர்களின் நோக்குநிலை மிகவும் மோசமானது.

இயேசு இந்த இரண்டு கண்ணோட்டங்களையும் அறிந்திருந்தார் மற்றும் புரிந்து கொண்டார்; மேலும் இந்த இரண்டு கண்ணோட்டங்களையும் அவர் மீது செயல்படுத்தும்போது அவர் மீது ஏற்படுத்தப்படும் அனுபவங்களை அவரால் தாங்க முடியாது என்று அவர் துக்கமடைந்தார். இந்த அச்சம் அவரது பெரும் துயரத்திற்கு காரணமாகிறது, ஆம், கெத்செமனேயில் துக்கமானது கிட்டத்தட்ட மரணத்தை விளைவித்தது. அவரது கெத்செமனே வியாகுலத்தின் முதல் வேதனையானது, எதிராளி அவரின் இருதயத்தில் ஒரு ஈட்டியைப் போல வீசிய எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது, அதாவது, அவர் இதுவரை செய்தது சரியாக செய்யவில்லை என்றும் மேலும் பூமியில் அவரது வாழ்க்கையின் அடுத்த மற்றும் கடைசி பதின்மூன்று மணிநேரங்களை நிரப்பக்கூடிய கொடூரமான காட்சிகளுக்கு மத்தியில் அவரது பரிபூரணத்தைப் பாதுகாக்க இயலாது என்பதுதான் எதிராளி அவரது இருதயத்தில் வீசிய கூர்மையான ஈட்டியாகும். இயேசு மிகுந்த கவனமும் விழிப்பும் பொறுப்புமுள்ள நபராய் இருந்தார். அந்த மணி நேரத்தில் தமக்குள்ளேயே போராடிக் கொண்டிருந்த

அச்சத்தை தாம் கொண்டிருந்த பொறுப்புணர்வால் எதிர்கொள்ள முடிந்தது. இயேசு கெத்செமனேக்கு முன்னும் பின்னும் செய்தது பூரணமாக இல்லாதிருந்தால் என்ன நடந்திருக்கும்? அது ஐந்து பயங்கரமான விஷயங்களைக் குறித்திருக்கும்:

**(1)** தேவனுடைய நிராகரிப்பின் கீழ் அவர் இருந்திருந்தால், இது அவருக்கு மிகவும் மோசமான தீமையாக இருந்திருக்கும், ஏனெனில் தேவனுடைய அங்கீகரிப்பின் உணர்வு, அவரது உயர்ந்த மகிழ்ச்சியாக இருந்தது;

**(2)** அவர் தேவனுடைய திட்டமாகிய கப்பலை மூழ்கடித்திருந்தால் அவருக்கு மற்றொரு பெரிய தீமையாக இருந்திருக்கும், ஏனெனில் அதன் வெற்றிகரமான நிறைவு, அவரது மிக உயர்ந்த மகிழ்ச்சி மற்றும் விருப்பங்களில் ஒன்றாகும்;

**(3)** அவர் சபையை தமது மணவாட்டியாக வென்றெடுக்க முடியாமல் போயிருக்கும். அது அவருக்கு சொல்ல முடியாத தீமையாயிருக்கும், ஏனெனில் அவளை வென்றெடுப்பது என்ற நம்பிக்கை அவரது முக்கிய மகிழ்ச்சியாக இருந்தது;

**(4)** மீட்கப்படாத மனுக்குலம் சாபத்தின் கீழேயே தொடர்ந்திருக்கும், அது அவருக்கு மற்றொரு சொல்ல முடியாத தீமையாயிருக்கும், ஏனெனில் அதன் மீட்பின் நம்பிக்கையும் அவரது முக்கிய மகிழ்ச்சிகளில் ஒன்றாகும்;

**(5)** அவர் இரண்டாம் மரணத்திற்குச் செல்வார் – அதாவது ஜீவியத்தின் முடிவு, பரம அழைப்பில் வெற்றி பெற $3^1/_2$ ஆண்டுகளாக மிகவும் கடினமாக செய்த முயற்சி விருதாவாயிருக்கும், அவர் தனது முந்தைய இயல்பு, கனம் மற்றும் உத்தியோகத்தை துறந்தது விருதாவாயிருக்கும், மேலும் அவர் தெய்வீக இயல்பிற்கான ஓட்டத்தில் தோல்வியடைவது மட்டுமல்லாமல், எதிர்கால ஜீவியமே இருக்காது. இந்த ஐந்து பேரழிவுகளின் அச்சம்தான் கெத்செமனேயில் இயேசுவை மிகவும் வியாகுலப்படுத்தியது.

அன்றிரவு கிட்டத்தட்ட அவரைக் கொன்ற பயம் இதுதான், அவருக்கு ஏற்பட்ட அல்லது வரப்போகும் எந்த துக்கத்தையும் விட இது அவரை வருத்தப்படுத்தியது, இதனால் அவருக்கு முன்னிருந்த இந்தப் பயங்கரமான அனுபவங்களை அகற்றுவதற்காக உரத்த சத்தத்துடனும் கண்ணீருடனும் ஜெபம் செய்தார், இது அதீத நரம்புச் சோர்வின் காரணமாக, அவருடைய வேர்வையை இரத்தத்தின் பெருந்துளிகளாய் விழச்செய்தது, மேலும் மூன்று முறை அவரை புரிந்து கொள்ளாத சீஷர்களிடம் இருந்து அவரது கலக்கமடைந்த ஆத்துமாவுக்கு ஏதோ ஆறுதல் தேடச் செய்தது. மரிப்பதற்காக அவர் துக்கமடையவில்லை, ஆனால் ஒரு சமுதாயத்திலிருந்து தள்ளப்பட்ட ஒரு கலகக்காரன் என்றும் ஒரு கலகக்கார சட்ட விரோதி என்பதன் மத்தியில் மரிப்பதாலும், அத்தகைய அனுபவங்களுக்கு மத்தியில் அவர் தனது பரிபூரணத்தை கடைபிடிக்க முடியாமல் போய்விடுமோ என்றும் அவரை பயப்பட வைத்தது, அவருடைய பயம் மரணத்தைப் பற்றியதல்ல என்ற எண்ணத்தை மீண்டும் கூறுவோம். அந்த ஐந்து விளைவுகளைப் பற்றிய எண்ணம் அவரை ஒரு மணிநேரம் கலங்கச் செய்ததில் ஆச்சரியமில்லை. இத்தகைய பெரிய பொல்லாப்பைத் தடுக்க அந்த அனுபவங்களைத் தம்மிடமிருந்து அகற்ற வேண்டும் என்று அவர் விண்ணப்பித்ததில் ஆச்சரியமில்லை! அவருடைய வியாகுலம், அழுகை, கண்ணீர், ஜெபங்கள் ஒரு மணிநேரத்திற்கு தொடர்ந்ததில் ஆச்சரியமில்லை! ஒரு தேவதூதரின் ஊழியம் கூட அவருக்கு உறுதியளிக்கவில்லை என்பதில் ஆச்சரியமில்லை! இத்தகைய துன்பகரமான மற்றும் பயமுறுத்தும் அனுபவங்களின் பாத்திரத்தை நீக்க வேண்டும் என்று அவர் மிகவும் ஆர்வத்துடன் விரும்பியதில் ஆச்சரியமில்லை. அந்தப் பாத்திரத்தையும் மற்றும் மேற்கூறிய தோல்வி ஏற்பட்டால் ஏற்படும் ஐந்து விளைவுகளையும் மனதில் வைத்து அதில் குடிக்கும்போது, அவர் தனது பூரணத்தை நிலைநிறுத்த தவறிவிடுவாரோ என்று அஞ்சியதையும் கருத்தில் கொண்டு, அவர் தனது வழக்கமான நிதானத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடிந்ததால் அது ஓர் ஆச்சரியமானதாகவே இருந்திருக்க வேண்டும்.

இந்த மாற்ற முடியாத பாத்திரத்தை கொடுத்தவர் பிதா என்பதை நமது பாடத்தின் தலைப்பு வாக்கியம் சுட்டிக் காட்டுகிறது. அதை நீக்க வேண்டுமென்ற கிறிஸ்துவின் மூன்று மடிப்பு ஜெபத்தை பிதா அருளவில்லை. மனிதனின் அக்கிரமம் இயேசுவுக்கு அத்தகைய பாத்திரத்தை வழங்கும் என்று அவர் முன்னறிந்த பிறகு, அவருடைய குமாரன் இந்த பாத்திரத்தில் பானம்பண்ண திட்டமிட்டார். தேவன் இந்தப் பாத்திரத்தைக் கலக்கும்படி மனிதனைக் கட்டாயப்படுத்தினார் என்று இதிலிருந்து நாம் முடிவு செய்யக் கூடாது; ஏனென்றால், "**தேவன் பொல்லாங்கினால் சோதிக்கிறவரல்ல.**" ஆனால் மனிதனின் துன்மார்க்கம் இயேசுவுக்கு இத்தகைய அனுபவங்களை உருவாக்கும் என்பதை முன்னறிந்த அவர், அவ்வாறு செய்ய அனுமதித்து ஒப்புதலளித்தார். ஏனென்றால் அவர் அத்தகைய அனுபவங்களை அனைவரின் நன்மைக்காகவும், குறிப்பாக அவருடைய குமாரனின் நன்மைக்காகவும் பயன்படுத்த முடியும் என்பதை அவர் முன்கூட்டியே அறிந்திருந்தார். எனவே, அவர்களின் அனுமதிக்கு சம்மதிக்க தீர்மானித்தார். ஆகையால்தான், பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது என்று இயேசு பிலாத்துவிடம் கூறினார் (யோவா. 19:11). கிறிஸ்துவின் எல்லா நெருக்கங்களிலும் தேவன் நெருக்கப்பட்டிருப்பதால், இயேசு அந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணியதில் தேவனே முதன்மையாக மனரீதியாக பாடுபட்டார் என்பதை, முந்தையவர் பிந்தியவரைப் பலியிடுவது தொடர்பான, ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் அடையாளமான அனுபவங்கள் நிரூபிக்கின்றது. (ஏசா. 63:9).

பின்னர், தேவன் ஏன் ஒப்புக்கொண்டு, இந்த பாத்திரத்தை அவருக்கு குடிக்க இவ்வாறாக தயார் செய்தார்?

நிச்சயமாக, அதற்கான மிகப் பெரிய தேவை எதுவும் இல்லையென்றால், அவர் அதைச் செய்திருக்க மாட்டார். அது என்னவாக இருந்தது? தேவன் இயேசுவை தெய்வீக சுபாவத்துக்கும், அவருடைய சுதந்தரவாளியாகவும், அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் அனைத்தையும் நிறைவேற்றுபவராகவும், அவருடைய பிரபஞ்சங்கள் அனைத்திலும் அவருடைய பிரதிநிதியாகவும், நித்திய காலத்திற்கும் அவரை தயார்படுத்திக் கொண்டிருந்தார். ஆகவே, தேவன் எந்த ஒரு எளிமையான மற்றும் கடினமான சூழ்நிலையிலும் தேவனுடைய ஆள்தத்துவம், குணாதிசயம், திட்டங்கள் மற்றும் கிரியைகளில் இயேசுவின் உண்மைத்துவத்துக்கான முழுமையான ஆதாரத்தை அவர் அவரிடம் கோரினார்; ஏனென்றால், அத்தகைய ஆதாரம் இல்லாமல், இயேசு, குண முதிர்ச்சியின்மை அல்லது குறைகளினால் மற்றொரு சாத்தானாக, அல்லது சாத்தானை விட பல மடங்கு மிஞ்சும் அளவுக்கு மாறக்கூடும், ஏனென்றால் அவரின் உயர்ந்த நிலைமை, சிறந்த வல்லமைகள் மற்றும் மரணமற்ற தன்மை அதாவது அழியாமையைக் கொண்டிருப்பார், இவை அனைத்தும் சாத்தானிடம் இல்லாதவை, எனவே அவன் அழிக்கப்படமுடியும், இயேசு ஒரு எதிராளியாக மாறினால், தேவன் எப்போதும் ஒரு தீய ஜீவியைக் கையில் வைத்திருக்க வேண்டியதாகிவிடும், அதாவது பாவம் நிரந்தரமாக நீடித்திருக்கும் நிலையாகும். இது தேவனால் அனுமதிக்க முடியாத ஒரு காரியமாகும். மேலும், இயேசு எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தையே தேர்ந்தெடுப்பார் என்ற உறுதியை தேவன் பெற்றிருக்க வேண்டும், இவ்வாறு அவருடைய குமாரன், சுதந்தரவாளி, நிர்வாகி மற்றும் பிரதிநிதி என்ற முறையில் எப்பொழுதும் வெற்றிகரமாக தேவனுடைய அனைத்து திட்டங்களையும் நோக்கங்களையும் முழுமையாக நிறைவேற்றுகிறார். எனவே, தனது சொந்த வெற்றிக்காகவும், மற்றவர்களின் நன்மைக்காகவும், இயேசு எப்போதும் தேவனுடைய சித்தத்தின்படியே செய்வார் என்பதற்கான ஆதாரத்தை தேவன் இயேசுவிடம் கேட்க வேண்டியிருந்தது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் ஒரு மனிதனுக்கும் ஒரு புது சிருஷ்டிக்கும் சாத்தியமான கடினமான அனுபவங்களைச் சகித்துக்கொண்டு, ராஜ விசுவாசத்தின் மூலம் இயேசுவானவர் இந்த ஆதாரத்தை அளிக்க வேண்டும். எனவே, எல்லா சூழ்நிலைகளின் கீழும் தேவன் விரும்புவதையெல்லாம் அவருக்கு உண்மையாகச் செய்வதிலும் சகித்துக்கொள்ளவும் அவரால் சார்ந்திருக்க முடியும் என்பதற்கான ஆதாரம் தேவனுக்கு வேண்டியிருந்ததை நாம் பார்க்கிறோம். இயேசுவுக்கு இந்தப் பாத்திரத்தை குடிக்கக் கொடுப்பதில் தேவன் ஞானமற்றவராகவோ, அநீதியானவராகவோ, அன்பில்லாதவராகவோ மற்றும் பலவீனமானவராகவோ இல்லை; மாறாக அவர் சத்தியம், நீதி, பரிசுத்தம், தன்னிலும், இயேசு, சபை, திரள்கூட்டம், மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்கள், பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்கள், தேவதூதர்கள், மனுக்குலம் மற்றும் தேவனுடைய எதிர்கால சிருஷ்டிகள் அனைத்தின் மீதுமான அவரின் உச்சகட்ட ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பு என்பதை இது நிரூபிக்கிறது.

ஆனால், இந்த பாத்திரத்தை இயேசுவுக்கு அளிக்க துன்மார்க்கரின் அனுமதிக்கு தேவன் ஒப்புக்கொண்டார், தேவனுடைய ஒப்புதல் அவருக்கு அந்த பாத்திரத்தை குடிக்கக் கொடுப்பதாகும், அது அவரிடம் வருவதை இயேசுவின் சீஷர்கள், குறிப்பாக பேதுரு தடுக்க முயன்றார். நிச்சயமாக, அவர்களின் மாம்சீக மனம்தான் அவர்களை அவ்வாறு செயல்படத் தூண்டியது; மேலும் மேசியாவின் ஆள்தத்துவம், குணாதிசயம் மற்றும் கிரியை பற்றி தற்போதைய யூதர்களின் தவறான கண்ணோட்டத்தால் அவர்கள் நிரப்பப்பட்டிருந்ததால், இயேசுவின் சோதனையான அனுபவங்களைப் பற்றிய தேவனுடைய திட்டத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. மேசியாவின் இரண்டு வருகைகளை அவர்கள் பார்க்கவில்லை, இதில் முதலாவது பாவத்திற்காகப் பாடுபடுவதற்காகவும் மற்றும் இரண்டாவது இழந்துபோனதை திரும்பக்கொடுத்தல் மறுசீரமைப்பின் மூலம் சாபத்தை நீக்குவதற்காகவும் இருக்கிறது. எனவே, கிறிஸ்துவின் பூமிக்குரிய இறுதி அனுபவ நிகழ்வுகளின் ஓட்டத்திற்கு அவர்கள் தயாராக இல்லை. மாறாக, அவர்கள் பகிர்ந்து கொள்ள எதிர்பார்த்த, தங்களின் கற்பனையான மேசியாவின் வல்லமையையும் மகிமையையும் இயேசு எடுத்து செயலாற்றுவார் என்று நம்பினார்கள், எனவே அவரை கைதுசெய்வதிலிருந்தும் சாத்தியமான மரணத்திலிருந்தும் விடுவிக்க முற்படுவது அவர்களுக்கு மிகவும் இயல்பான விஷயமாயிருந்தது. ஆகவே, பேதுரு மற்றும் மற்றவர்களின் முயற்சிகள், தங்களின் அன்பான ஆண்டவருக்கு வரும் பூமிக்குரிய தீமையைத் தடுப்பதாயிருந்தது. நிச்சயமாக, அவர்கள் நீண்ட காலத்திற்குப் பிறகு எழுதப்பட்ட பாடலின் எண்ணங்களை எடுத்துக் காட்டினார்கள்: குருட்டுத்தனமான அவநம்பிக்கை நிச்சயமாக தவறவிருக்கிறது அது அவருடைய கிரியைகளை விருதாவாகவே ஆராய்கிறது; தேவனே அவருடைய சொந்த விளக்கவுரையாளர், அவரே அதனைப் புரியும்படி தெளிவு படுத்துவார்.

மாம்ச பிரகாரமான மனம் அதன் குருட்டுத்தனத்தாலும், அசுத்தத்தாலும் தேவனோடு பகைமை கொள்கிறது என்பதையும், மனிதர்கள் தேவனுடைய ரதத்தின் பாதையில் தங்களை குறுக்கிட்டு கொள்ளக் கூடாது என்பதையும் சீஷர்கள் கற்றுக் கொள்ள வேண்டும், இப்போது நாமும்கூட அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும்; ஏனென்றால், அவர்கள் அவ்வாறு செய்தால், அது அவர்கள் மீது காயத்தை ஏற்படுத்தும். அவருடைய வழிகள் மிகவும் சிறந்தவைகளாயிருக்கின்றன; அவை அனைத்தையும் அவரே தேவன் திட்டமிடுகிறபடியால் அவை இளைப்பாறுதலுக்கு வழிநடத்திச் செல்கின்றன.

ஆனால் இந்த விஷயத்தில் அவருடைய சிநேகிதர்கள் தேவனுடைய சித்தத்தில் தலையிட முயன்றபோது, இயேசு பிதாவின் சித்தத்திற்கு தனது தீர்மானத்தை இவ்வாறு

**பாத்திரத்தில் பானம் பண்ணுவதிலுள்ள பாடங்கள்**

**இந்த பாத்திரத்தில் பானம்பண்ண தனது மடியிலிருந்த குமாரனைக் கொடுத்ததில் தேவன் செய்த மாபெரும் தியாகத்தை நாம் மதித்துப் பாராட்டுவோம்.**

**இயேசு அவருடைய ஆள்தத்துவம், குணம், வார்த்தை மற்றும் கிரியையில் மிகவும் மனமுவந்து, மிகவும் சாந்தமாக, மிகவும் தாழ்மையாக, மிகவும் உண்மையாக மற்றும் மிகச்சரியாக அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணியதால் அவரை உயர்வாக மதித்துப் பாராட்டுவோம்!**

**நம்முடைய பாத்திரம் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதை மனதார நம்புவோம்.**

**இயேசு அவருடைய பாத்திரத்தை ஏற்றுக்கொண்ட அதே ஆவியில், நமது பாத்திரத்தை நாமும் ஏற்றுக்கொள்வோமாக. மனப்பூர்வமாகவும், சாந்தமாகவும், பணிவாகவும், உண்மையாகவும்.**

வெளிப்படுத்தினார், "**பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம் பண்ணாதிருப்பேனோ?**" என்றார். ஆம், அந்த சாந்தகுணமுள்ள தேவனுடைய பரிசுத்த ஆட்டுக்குட்டியானவர், தேவனுடைய சித்தத்தை அறிந்து கொண்டு, கசப்பான அந்த சித்தத்தைப் இறுதிவரை பின்பற்றுவதற்கு முழுமையாக தீர்மானம் செய்தார். எனவே, அவர் அந்தப் பாத்திரத்தின் கசப்பான கடைசி சொட்டு வரை குடித்தார். மேலும் அவர் முதலில் அன்னாவிடம், பின்னர் காய்பாவிடம், பின்னர் சனகெரிப், பின்னர் பிலாத்து, பின்னர் கல்வாரி மற்றும் பின்னர் சிலுவை வரை பிணைக்கப்பட்டு, இழுக்கப்பட மனமுவந்து ஒப்புக்கொடுத்தார். அவர் மிகவும் அநியாயமான இரண்டு சோதனைகளின் பரிகாசத்திற்கு விருப்பத்துடன் சமர்ப்பித்தார், அவைகளில் ஒன்று மதம் சார்ந்த நியாயசபைக்கு முன், மற்றொன்று மதசார்பற்ற நியாயசபைக்கு முன். மேலும் அவர் தானாக முன்வந்து இரண்டு தவறான மற்றும் அநீதியான தண்டனைக்கும் தன்னை ஒப்புவித்தார். யூத மற்றும் ரோமானியப் போர் சேவகர்களால் அவர் உட்படுத்தப்பட்ட அவமானம், அவமதிப்பு மற்றும் ஏளனம் ஆகியவற்றை எதிர்க்காமல் சகித்துக் கொண்டார்.

அவர் தனது முகத்தை துப்புவதற்கும், அறைவதற்கும், குத்துவதற்கும், தாடியின் முடியை பிடுங்குவதற்கும் மறைக்கவில்லை. அவரது பலவீனமான, அடிபட்ட முதுகு மற்றும் தோள்கள் மீது கனமான சிலுவையை போடுவதற்கும் மற்றும் கசையடிகளுக்கும் அவர் விருப்பத்துடன் இணங்கினார். அவர் தன்னை சிலுவையில் கிடத்தவும், கொடூரமான ஆணிகளை தனது பரிசுத்தமான கரங்கள் மற்றும் கால்களில் அடிப்பதற்கும், தன்னையும் சிலுவையையும் உயர்த்தி, அதில் தொங்குவதோடு, அதை நாட்டுவதற்கு தயாராக இருந்த துளைக்குள் சிலுவையை இறக்கவும் அவர் விருப்பத்துடன் அனுமதித்தார். அவர் தனது கைகள் மற்றும் புயங்கள், அவரது பாதங்கள் மற்றும் கால்களை நெருக்குவதற்கு மனமுவந்து ஒப்புவித்தார், இதனால் அவரது இரத்தம் உடல் முழுவதும் செல்ல முடியாமல், அவரது தலைக்கு சென்றது, இது அவருக்கு கடுமையான எரிகாய்ச்சலையும் தலைவலியையும் கொடுத்து, அவரை வெப்பம் மற்றும் வலி மிகுதியால் வெடிப்பது போல் உணர வைத்தது. பின்னர் அவலட்சணமான தோற்றம், விரோதமான சைகைகள், பரிகாசங்கள் மற்றும் கூட்டத்தின் கொடூரமான ஏளனங்களை அவர் சாந்தமாக தாங்கினார். மேலும் அவர் தனது பூமிக்குரிய தாய் உட்பட, அங்கிருந்த அவரது சில சிநேகிதர்களின் துன்பம், ஏமாற்றம் மற்றும் வருத்தத்தை அனுதாபத்துடன் சகித்துக் கொண்டார். பாவத்தைச் சுமப்பவராக தேவனால் கைவிடப்பட்டதாக உணரும் பயங்கரத்தை அவர் கட்டுப்படுத்தி சகித்தார். இவை அனைத்தும் முடிந்த பிறகு, அவரின் பூரணமான எண்ணம், நோக்கம், சொல் மற்றும் கிரியையில் அனைத்தையும் சுமந்த பிறகு, அவர் தாமாக முன்வந்து, சாந்தமாக பணிவுடன், தலையைச் சாய்த்து, ஜீவனை விட்டார். தேவனுடைய சாந்தமும் பரிசுத்தமுமான ஆட்டுக்குட்டியானவர் அவரது பாத்திரத்தின் கடைசி துளிவரை பருகினார்.

## நமது வேத ஆராய்ச்சியிலிருந்து சில பாடங்கள்

பிதா இயேசுவுக்கு கொடுத்த பாத்திரத்தில் பானம் பண்ணுவது பற்றிய நமது ஆராய்ச்சியிலிருந்து, நமது நன்மைக்கான சில பாடங்கள் இருக்கின்றன; அதனை வெளியே கொண்டுவர நாங்கள் விரும்புகிறோம்.

இந்த வேத ஆராய்ச்சியிலிருந்து கிடைக்கும் முதல் பாடம்: இந்த பாத்திரத்தில் பானம்பண்ண தனது மடியிலிருந்த குமாரனைக் கொடுத்ததில் தேவன் செய்த மாபெரும் தியாகத்தை நாம் மதித்துப் பாராட்டுவோம். பெரும்பாலான ஜனங்கள் அதில் தேவனுடைய மாபெரும் தியாகத்தைக் காணத் தவறிவிடுகிறார்கள். இருண்ட யுகத்தின் நம்பிக்கைகளானது, பாவியின் சார்பாக தேவன் தனது குமாரனை வழங்கியதில், அவரைப் பழிவாங்கும் எண்ணமுடையவராகப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, இதனால் இந்த காரியத்தில் தேவனுக்குக் கொடுக்க வேண்டிய நன்மதிப்பைக் கொடுக்கத் தவறிவிட்டனர். வேதாகம உண்மையின்படி, இந்த நிகழ்வில் தேவன்தான் முதன்மையாக பாதிக்கப்பட்டவர். தனது எதிரிகளுக்காக, அவர் 34 ஆண்டுகளுக்கும் மேலாக லோகாசுடனான தனது தனிப்பட்ட ஐக்கியத்தைக் கைவிட்டார்; அவர்களுக்காக இயல்பிலும், கனத்திலும், உத்தியோகத்திலும் அவரைத் தாழ்ந்த நிலையையடைந்தவராகக் கண்டார்; மேலும் அவர் இயேசுவின் மூன்றரை வருட ஊழியத்தின் போது அதிக உழைப்பு, துன்பம், சோர்வு, தனிமை, தவறான புரிதல் மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றிற்கு ஆளானதையும் கண்டார், இறுதியாக அவர் அந்தக் கசப்பான பாத்திரத்தில் பானம்பண்ணுவதையும் கண்டார்.

மிகவும் அன்பான அனைத்து மனுஷீக தகப்பனாலும் சகிக்க முடியாததை அவர் எப்படி சகித்திருப்பார்? இது சத்தியம், நீதி, பரிசுத்தம் ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த

முழு ஈடுபாடு, வரவிருக்கும் குமாரர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் மனுக்குலத்தின் மீது அவர் கொண்டிருந்த அன்பு, அவருடைய குமாரனை தன்னுடைய சுதந்தரவாளியாக, நிர்வாகியாக, பிரதிநிதியாக ஆக்க விரும்பிய அவரின் அன்பு, ஒன்று அல்லது அனைத்து எதிர்கால சிருஷ்டிகள் மீதான அன்பினிமித்தமும் அவரது குமாரனுடன் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ண அவருக்கு உதவியது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எந்த உண்மையான தகப்பனும் வெகுவாய் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்களா? அடையாள மான நிகழ்விலும் அடையாளமான ஆபிரகாம், இயேசுவின் அடையாளமான ஈசாக்கை விட, அதிகம் பாதிக்கப்பட்டார். தேவனால் இங்கே காண்பிக்கப்பட்ட இந்தப் பாத்திரம் இதுவரை இருந்த அல்லது இருப்பதிலேயே நேர்த்தியானது, சிறந்தது மற்றும் மிகச் சிறந்ததாகும். எனவே, எவருக்கும் வழங்கக்கூடியதை விட மிக உயர்ந்த, மிகுந்த மற்றும் உன்னத துதிக்கு அவர் தகுதியானவர். ஆகவே, இயேசுவின் பாத்திரத்தில் பிதாவின் பங்கைப் பற்றிய இந்த ஆய்வில் இருந்து, நம்முடைய சாதாரண, பலவீனமான மற்றும் வீழ்ச்சியடைந்த ஆற்றல்களால் உணரவும் வெளிப்படுத்தவும் முடிந்த அளவுக்கு அவரைப் போற்றுவோம். ஓ, நம் அனைவரின் நன்மைக்காக, இயேசு இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணுவதைத் தாங்கும், இவ்வளவு மகத்தான குணம் கொண்டவருக்கு முன்பாக, நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்! அவரை வணங்கி, தொழுதுகொள்வோம்! நன்றியுணர்வும் துதியும் நிறைந்த அன்பில் நம்முடைய அனைத்தையும் அவருக்கு கொடுப்போம்!

இந்த கட்டுரையிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டாவது பாடம்: இயேசு அவருடைய ஆள்தத்துவம், குணம், வார்த்தை மற்றும் கிரியையில் மிகவும் மனமுவந்து, மிகவும் சாந்தமாக, மிகவும் தாழ்மையாக, மிகவும் உண்மையாக மற்றும் மிகச்சரியாக அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணியதால் அவரை உயர்வாக மதித்துப் பாராட்டுவோம்! இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ண தயாராகும் அல்லது அதில் ஈடுபடும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்க அவர் கட்டாயப்படுத்தப்பட வில்லை என்பதை நினைவில் கொள்வோம். ஒரு மனிதனாக இயல்பிலும் கனத்திலும் கீழான நிலைக்கு வர, அவர் விருப்பத்துடன் தனது – லோகாஸின் – இயல்பு, கனம் மற்றும் உத்தியோகத்தை தானாகவே துறந்தார். அவர் 34 வருடங்களாக தனது பிதாவுடன் இல்லாததையும், $3^1/_2$ வருட உழைப்பு, துயரம், சோர்வு, தனிமை, தவறான புரிதல் மற்றும் எதிர்ப்பு ஆகியவற்றையும் விருப்பத்துடன் சகித்தார். மேலும் அவர் தனது இறுதி துயரமான பாத்திரத்தின் ஒவ்வொரு கசப்புச் சுவையையும் அதன் கடைசித் துளிகள் வடியும் வரை விருப்பத்துடன் ஏற்றுக்கொண்டார். மேலும் அவர் தனது அன்பான பிதாவைப் பிரியப்படுத்தவும், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வகுப்பார்களையும் வென்றெடுப்பதற்கும், உலகை மீட்டு ஆசீர்வதிப்பதற்கும், மனம் திரும்பிய வீழ்ச்சியடைந்த தூதர்களை மீட்டெடுப்பதற்கும், மேலும் தேவனுடைய மகிமைக்காகவும் மற்றும் மற்றவர்களின் நன்மைக்காகவும் சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தம் ஆகியவற்றை மிகவும் திறம்பட முன்னெடுத்துச் செயல்படுத்துவதற்காக தேவனுடைய சுதந்தரவாளியாகவும், நிர்வாகியாகவும் மற்றும் பிரதிநிதியாகவும் மாறுவதற்காகவும், இதையெல்லாம் செய்ய விருப்பமுடன் தயாராக இருந்தார். அவர் இந்தப் பாத்திரத்தில் குடிப்பதிலிருந்து பிரகாசிக்கும், அவருடைய குணாதிசயத்தை நாம் சிந்தித்துப் பார்க்கையில், தேவனுடைய சிங்காசனத்தைப் பகிர்ந்துகொள்பவராகவும், அவ்வாறு செய்வதற்குத் தகுதியானவராகவும் இருப்பவருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள். தேவனுடைய குணாதிசயத்திற்கு அடுத்தபடியாக, தேவனுடைய அனைத்துப் பிரபஞ்சங்களிலும் இயேசுவின் குணமே மிகவும் போற்றத் தக்கது, மிகவும் பாராட்டத்தக்கது, மிகவும் துதிக்கப் படத்தக்கது மற்றும் உன்னதமானது ஆகும். ஆம், ''**அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்**'' அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுவதைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது அவரை பரிசுத்த அலங்காரத்தில், முற்றிலும் அன்பானவராக அவரைப் போற்றுவதற்கு பிதாவின் கீழ் மிக உயர்வாகக் கற்றுக்கொள்வோம்.

இயேசு அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணியதிலிருந்து நாம் சரியாகக் கற்றுக்கொள்ளக்கூடிய மூன்றாவது பாடம்: நம்முடைய பாத்திரம் தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டது என்பதை மனதார நம்புவோமாக. நம்முடைய விருப்பமற்ற, கடினமான மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாத அனுபவங்களினிமித்தம், சாத்தான் மீதும் உலகத்தின் மீதும் குறை கூறுவதற்கு நாம் மிகவும் ஆவலாக இருக்கிறோம். நிச்சயமாக, சாத்தானும் உலகமும் அவற்றின் இரண்டாம் நிலை முகவர்களாக இருந்தாலும், அவர்கள் அவற்றின் முதன்மைக் காரணம் அல்ல. தேவன் அனுமதிக்காத வரை அவர்களால் நமக்கு எதிராகவோ அல்லது விரோதமாகவோ எதுவும் செய்ய முடியாது. இந்தக் கொள்கையை கிறிஸ்து பிலாத்துவிடம் இவ்வாறு வெளிப் படுத்தினார், ''**பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது**'' (யோவா. 19:11). இது அவருடைய சரீரத்தின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் பொருந்தும். எனவே, தேவனுடைய அனுமதியின்றி அவர்களை யாரும் எதுவும் செய்ய முடியாது. பரிசுத்தவான்களுக்கு விருப்பமற்ற அனுபவங்கள் தற்செயலாக அவர்களுக்கு வருவதில்லை; ஏனென்றால், தேவனுடைய ஜனங்களின் வாழ்க்கையில் தற்செயலாக எதுவும் நிகழ்வதில்லை, மாறாக அவர்களுக்கு நேரிடும் அனைத்தும், சிறிய விஷயங்கள்கூட, தெய்வாதீனமாக வடிவமைக்கப் பட்டுள்ளன (மத். 10:29-31), மேலும் அவை அனைத்தும் அவர்களுடைய ஆவிக்குரிய நன்மைக்காக தேவனால் கையாளப்படுகின்றன (ரோம. 8:28, 29; 2 கொரி. 4:16-18).

கூடுதலாக தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய பட்டயங்களாக தீட்டப்படுவதற்கும், தேவனுடைய அரிவாள்களாக தீட்டப்படுவதற்கும், தேவனுடைய ஆலயக் கற்களிலிருந்து உபரி பாகங்களை வெட்டுவதற்கு உளியாகவும், இந்த கற்களிலிருந்து கடினத்தன்மையை நீக்குவதற்க்கும், அவற்றை பளிங்கு போல பளபளக்கும்படி செய்வதற்கும், கசடுகளிலிருந்து தேவனுடைய ஜனங்களை பொன்னாகவும் வெள்ளியாகவும் சுத்திகரிக்கப்படுவதற்கும் சாத்தானும் உலகமும் மிக அவசியமான சாணைக்கல்லாக இருக்கிறார்களே யல்லாமல் வேறல்ல.

காரணம் தெளிவாக உள்ளது: நாம் கிறிஸ்துவின் பாடசாலையில் இருக்கிறோம்; மேலும் அங்கு கற்பிக்கப்படும் பாடங்கள் மற்றும் அனுபவங்கள் அனைத்தும் தேவனுடைய நேரடியான கட்டளையால் தான் நடைபெறுகிறது. தேவ ஜனங்களின் காலங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது, (சங். 31:15), அத்துடன் அவர்களின் பாடங்கள் மற்றும் அனுபவங்களும். அவர்கள் பூரணத்தை நோக்கி வளர்ச்சியடைவதற்கும், அவர்களின் கறைகளை நீக்கு-வதற்கும் அவர்களுக்கு என்ன தேவை என்பதை அவர் நன்கறிவார்; மேலும் இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்ற சிறந்த வழிகளில் அவர்களது அனுபவங்களை அவர் வடிவமைக்கிறார். அவர் தவறாதபடிக்கு மிகவும் ஞானமுள்ளவர், மேலும் இந்த இரண்டு நோக்கங்களைப் பெறுவதற்குத் தேவையானதை விட கூடுதலாக கடுமையான அனுபவங்களைப் பெற அனுமதிக்காதபடிக்கு மிகவும் கனிவானவர். யோசேப்பு மற்றும் அவனது சகோதரர்களின் நிகழ்வு நிரூபிப்பது போல, சாத்தானும் எதிராளியான ஜனங்களும் நமக்குத் தீமையைக் கொண்டுவரும் அதே வேளையில், தேவன் அதை நமக்கு நன்மைக்கேதுவாக மாற்றுவார் என்ற விசுவாசத்தின் முழு நிச்சயத்தை நாம் பெற்றிருப்போம். இதை நாம் மனப்பூர்வமாக விசுவாசித் தால், அது நம் அடிகளில் உள்ள வலியையும், நம் துயரங்களில் உள்ள கசப்பையும், நம் கண்களிலிருந்து வரும் கண்ணீரையும் நீக்கும். மேலும் நாம் துயரங்களின் நீரோடையைக் கடக்கும்போது, அது நம்மை இடறலடையச் செய்யாமல், படிக்கற்களாக ஆக்கிவிடும். மேலும் இது அவர்களின் அதிகமான பாரத்தைக் குறைத்து, அவற்றின் கடுமையான பாரத்திலிருந்து நடுநிலையாக்கும்; மேலும், இது தளர்ந்து போன நமது கைகளை திடப்படுத்தி, சோர்வடைந்த கால்கள் மற்றும் பாதங்களை வேகப்படுத்தும். எனவே, நமது விரும்பத்தகாத அனுபவங்கள் அனைத்தும் தேவனிடமும், தேவனுக்கடுத்த காரியங்களிலும் சிறந்த வெற்றியைப் பெறுவதற்கு உதவும், தேவனுடைய திட்டத்தின் ஒரு பகுதியாகும் என்று உறுதியாக நம்புவோமாக.

நான்காவது பாடமாக நமது கற்றுக் கொள்ளுதல் மற்றும் பயிற்சிக்காக நமது பாடத்தின் தலைப்பு வசனம் பரிந்துரைக்கிறது என்னவெனில்: இயேசு அவருடைய பாத்திரத்தை ஏற்றுக்கொண்ட அதே ஆவியில், நமது பாத்திரத்தை நாமும் ஏற்றுக்கொள்வோமாக. அதை அவர்




மனப்பூர்வமாகவும், சாந்தமாகவும், பணிவாகவும், உண்மையாகவும் ஏற்றுக்கொண்டதை மேலே பார்த்தோம். அவரைப் போலவே நாமும் நம்முடையதை மனப்பூர்வ-மாகவும், சாந்தமாகவும், பணிவாகவும், உண்மையாகவும் எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு பரிபூரணமாகவும் ஏற்றுக்கொள்வோம். பிரதிஷ்டையில் நம்முடையதும் மற்றும் உலகத்தின் விருப்பங்களை விட்டுவிட்டு, தேவனுடைய சித்தத்தை நம்முடையதாக ஏற்றுக்கொண்டு, எல்லா விதமான முறுமுறுப்பு, குறைகூறுதல், மனசோர்வுகள் மற்றும் அவைகளை வெறுப்பதற்கான நமது குறைந்தபட்ச போக்கை அடக்குதல் ஆகிய எல்லாவற்றையும் தவிர்த்து, தெய்வீக ஞானம் நமக்குத் தரும் எந்தப் போக்கையும் அல்லது அனுபவத்தையும் மனமுவந்து ஏற்றுக்கொண்டு, நமது பிரதிஷ்டையின் பொருத்தனையை நிறைவேற்று-வோம். இயேசுவைப் போன்று நாமும் மனத்தாழ்மையுடன் நமது பாத்திரத்தில் பானம் பண்ணுவோம். பிதா தனக்கு பானம்பண்ணுவதற்காக ஊற்றிய பாத்திரத்தைப் பார்க்கிலும் தான் மேலானவர் என்று அவரே நினைக்கவில்லை-யென்றால், நிச்சயமாக அவரை விட மிகவும் குறைவான-வர்களும், அவரைப் போல அருந்துவதற்கு அவமான-கரமான பாத்திரம் இல்லாதவர்களுமான நாம், நமது பாத்திரத்தில் பானம் பண்ணுவதற்கு நமது மனப்பான்மை, நோக்கம், எண்ணம், சொல் மற்றும் கிரியை ஆகியவற்றில் நம்மைநாமே தாழ்த்திக் கொள்ள வேண்டும்.

அதன் சுவையானது நமது அடையாளமான உதடுகளைச் சுருக்கி மடக்கவும், நமது அடையாளமான அண்ணங்களைப் பின்வாங்கவும் செய்தாலும்கூட, அந்த பாத்திரத்தின் உள்ளடங்கியவைகளைக் குறித்து கொஞ்சம் கூட மனக்கசப்பை உணர்த்தாமலும் வெறுப்பை வெளிப் படுத்தாமலும் செயலினால் வெளிப்படுத்தாமலும், அவரைப் போல, சாந்தமாக நமது பாத்திரத்தில் பானம்பண்ணுவோம். மாறாக, நமது மனம் கற்றுக் கொள்ளக்கூடியதாகவும், நமது உணர்வுகள் அன்பானதாகவும், நமது சித்தங்கள் அவைகளிடம் வழிநடத்துவதாக இருக்கட்டும். எந்த விதத்திலும் ஆவியிலும், கனிவிலும், நமக்கு தீமை செய்பவர்களுக்கு பதிலளிக்காமல், ஆனால் இவை எல்லாவற்றையும் நம்முடைய நன்மைக்காக திட்டமிட்டுள்ள தேவனுடைய வல்லமையுள்ள கரத்தின்கீழ் பொறுமையுடன் அடங்கியிருக்கவேண்டும். இறுதியாக, நம்முடைய பாத்திரத்தை பானம்பண்ணுவதில் உண்மையுள்ளவர்-

களாகவும் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பரிபூரணராகவும் இருக்க இயேசுவின் முன்மாதிரியிலிருந்து கற்றுக் கொள்வோம். இந்தப் பாத்திரத்தை இனிமையாக்கு-வதற்காக சத்தியம், நீதி, பரிசுத்தம் ஆகியவற்றில் எந்த சமரசமும் செய்யாமலிருப்போமாக. மாறாக, அதை நாம் பானம்பண்ணுவதை தேவனுடைய சித்தமாக நாம் நோக்கிப்பார்த்து, நமது பலவீனங்களுக்கான அவரின் இரக்கத்திற்காகவும் மற்றும் ஏற்ற நேரத்தில் உதவி செய்யும் அவரின் கிருபைக்காகவும் தேவனை நம்பி சார்ந்திருக்க வேண்டும். அவர் அதை பிடித்திருக்கும் வரை பாத்திரத்திலிருந்து நம் உதடுகளை அகற்ற முடியாத அளவிற்கு அழுத்தி, அதன் கடைசி வண்டல்களையும் குடிக்கும் வரை முழு இராஜவிசுவாசத்துடன் முழுவதுமாக பானம் பண்ணுங்கள், அதுவே நமது கர்த்தருடைய சித்தம் என்று கண்ட பிறகு, எந்த வகையிலும் அதை மாற்ற முற்படவேண்டாம்; ஆனால், இயேசுவைப் போல, முழு விசுவாசத்துடனும் மற்றும் சாத்தியமான பூரணத்துடனும், விடாமுயற்சியுடன், அதன் கசப்பான முடிவு வரை பானம்பண்ணி, பின்னர், இயேசுவைப் போலவே, இப்பானம் முடிந்த பிறகு, நம் ஆண்டவருடன் ராஜ்யத்தில் புதிய திராட்சைப் பழரசத்தை பருகும் சிலாக்கிய பாக்கியத்தைப் பெறுவோமாக. இறுதிவரை விசுவாச உண்மைத்துவத்-துடனும் பரிபூரணமாகவும் பானம் பண்ணிய அவருடன் பானம்பண்ணும் சிலாக்கியத்தை பெற்று, "**பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில் நான் பானம்பண்ணாதிருப்பேனோ?**" என்று அவரோடுகூட சொல்வோமாக. ***

# உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது

Thy Faith Hath Saved Thee

"**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.**" (லூக். 19: 10).

மனுஷகுமாரன் வந்திருக்கிறார்... இந்த வார்த்தைகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் நமது கர்த்தருடைய வேலையை வெளிப்படுத்துகின்றன. இதைச் சரியாக வாசிக்க கற்றுக்கொள்பவர்களுக்கு இது, பாவத்தினாலும் அதன் தண்டனையான மரணத்தினாலும் சிக்கித் தவிக்கும் ஆதாமின் சந்ததியினரான மனிதக்குலத்தைப் பற்றி எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்-கூடாதே என்பதைக் குறித்து சொல்கிறது. (சங் 49:7). இந்த உரை, மனுஷகுமாரனால் வழங்கப்பட்ட ஒரே பரிகாரமாகிய தீர்வையே வெளிப்படுத்துகிறது. "**அவர் ஐசுவரியமுள்ள-வராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள்நிமித்தம் தரித்தி-ரரானாரே**" அவருடைய தரித்திரத்தினாலே நீங்கள் ஐசுவரியவான்களாகும்படி – பரலோக நிலையை விட்டுவிட்டு, "**தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு**" மானிட இயல்புக்கு தன்னைத்தானே தாழ்த்தினார் (2 கொரி. 8:9; எபி. 2: 9). இந்த சூழலில் "இழந்துபோனது" என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வது "இரட்சிக்கப்பட்டது" என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. மனிதன் பாவத்திலும் மரணத்திலும் இழந்து போனது போலவே, அவன் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் திரும்பக் கொண்டுவரப்பட வேண்டும்.

தேவனுடைய ஏற்பாட்டில், "இரட்சிக்கப்பட்டது" என்பது பாவத்திலிருந்தும் அதன் தண்டனையான மரணத்தி-லிருந்தும், அதனுடன் தொடர்புடைய துக்கம், வேதனை, அபூரணம் மற்றும் மரணம் ஆகியவற்றின் அனைத்து இணக்கங்களிலிருந்தும் மீட்கப்படுதல் என்பதைக் குறிக்கிறது. இந்த வேத வாக்கியத்தின்படியான முன்மொழிவு





எவ்வளவு நியாயமானது, எவ்வளவு விவேகமானது! இயேசுவின் இரண்டாம் வருகையில் மனிதகுலத்திற்கு கொண்டு வரும் மீட்பு அல்லது இழந்து போனதை திரும்ப கொடுத்தல் என்பது, "**உலகத் தோற்றமுதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் காலத்தில்**" நிறைவேறும் என்ற அப்போஸ்தலரின் கூற்று எவ்வளவு நன்றாக இதை ஆதரிக்கிறது (அப் 3: 21). ஆங்கில வேதாகமம் பார்க்கவும். இந்த இரட்சிப்பு, குறிப்பாக கிறிஸ்துவின் ஆயிர வருட மத்தியஸ்தர் ஆட்சிக்கு மிகவும் பொருந்துவதாக இருந்தாலும், தற்போதைய காலகட்டத்தில், 1874 முதல் கிறிஸ்துவின் ஆயிர வருட மத்தியஸ்தர் ஆட்சி தொடங்கும் வரை, தெய்வீகக் கிருபையின் செய்திகளுக்கு கவனம் செலுத்த திறந்த அறிவின் கண்களையும், செவிகளையும் ஏற்றுக் கொள்ளும் இருதயங்களையும் கொண்டவர்களுக்கு இரட்சிப்பின் ஒரு தொடக்கத்தை அளித்து வருகிறார். அது தற்போதைய சாதகமற்ற சூழ்நிலைகளில் மெதுவாக பேசப்பட்டு, ஆனால் படிப்படியாக எல்லா செவிகளும், கேட்கும்படியாக ஒலிக்கும்.

# பார்வையற்ற பர்திமேயுவின் விசுவாசம் (லூக். 18:35–43)

இயேசு எரிகோ வழியாக எருசலேமுக்கு சென்று கொண்டிருந்தார். பஸ்கா பண்டிகை நெருங்கிக் கொண்டி–ருந்தது, எருசலேமுக்குச் செல்லும் சாலைகள் பயணிகளால் நிறைந்திருந்தன. அவர்கள் பொதுவாகக் கூட்டமாக அல்லது குழுக்களாகச் செல்வது வழக்கம். நம்முடைய ஆண்டவ–ருடனும் அவரது சீஷர்களுடனும் கணிசமான நண்பர்களும், எண்ணற்ற பரிசேயர்களும் எரிகோவை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். வழியருகே பார்வையற்ற பர்திமேயு என்ற பிச்சைக்காரன், வழிப்போக்கர்களின் அனுதாபத்தைத் தூண்டும் நம்பிக்கையில் அமர்ந்திருந்தான். அந்த காலகட்டத்தில் பார்வையற்றோருக்கு எந்த சிறப்பு ஏற்பாடுகளும் இல்லை, அந்த பகுதிகளில் அவர்களில் பலர் இருந்தனர்.

பல குழுக்கள் கடந்து சென்றிருந்தபோதிலும், இந்தக் குழுவினர் மீது பர்திமேயுவின் கவனத்தை ஈர்க்க ஏதோ ஒரு சிறப்பான விஷயம் இருந்தது, அவன் இத்தனை பெரிய கூட்டம் யாரை அல்லது எதைக் குறிக்கிறது என்று கேட்டான். நசரேயனாகிய இயேசு கடந்து செல்கிறார் என்றும், இந்த சலசலப்பு, இந்தக் கூட்டம் அவருடன் இருந்தவர்களைக் குறிக்கிறது என்றும் அவனுக்குச் சொல்லப்பட்டது. பலர் இயேசுவுக்கு முன்னால் சென்று கொண்டிருந்ததால், கர்த்தர் தன்னிடம் வருவதற்கு முன்பே பார்வையற்ற மனிதன் இரக்கத்திற்கும் உதவிக்கும் கூப்பிட ஆரம்பித்தான். முன் நடப்பவர்கள் அவனைக் கண்டித்து, அவன் கூச்சலிடுவதை நிறுத்துமாறு கூறி, பெரிய போதகரை வழியருகேயிருந்த பிச்சைக்காரன் இடைமறிக்கக் கூடாது என்று குறிப்பிட்டனர். ஆனால் அந்த மனிதன் ஏற்கனவே இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டிருந்தான் அவரால் குணப்படுத்தப்பட்ட பிற பார்வையற்றோரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். ஏதோவொரு வகையில், நாசரேத்தின் இந்த தீர்க்கதரிசி தனக்கு விடுதலை அளிக்க முடியும், அவர் உண்மையான மேசியா, தேவனுடைய குமாரன் என்பதை அவன் உறுதியுடன் நம்பினான். எனவே, அவன் உரத்த அழுகையின் குரலில், "**தாவீதின் குமாரனே** (மேசியா), **எனக்கு இரங்கும்!**" என்று கூப்பிட்டான்.

பவனி நின்றது, இயேசு அந்த மனிதனை தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார். அவர் அவனிடம் வா என்று சொல்லி சத்தமிடாமல், அவனை அழைத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். மாற். 10:49 - 52-ல் பார்வையற்ற மனிதனை அழைத்து வந்தவர்கள் அவனிடம், "**திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார்**" என்றதும், உடனடியாக பதிலளிக்க அவன் தனது மேல் வஸ்திரத்தை அல்லது போர்வையை விலக்கி எறிந்ததாகவும் கூறுகிறது. இயேசுவிடம் அழைத்துச் செல்லப்பட்டபோது, இயேசு, நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றிருக்கிறாய்? என்று கேட்டார். அதற்கு அவன், "**ஆண்டவரே, நான் பார்வையடைய வேண்டும்**" என்றான். அதற்கு, "**நீ போகலாம், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது**" என்று இயேசு பதிலளித்தார். உடனே அவன் பார்வையடைந்து, வழியிலே இயேசுவுக்குப் பின்சென்றான்.




பாலஸ்தீனம் முழுவதும் பல பார்வையற்ற மனிதர்கள் இருந்தனர், ஆனால் ஒப்பீட்டளவில் அவர்களில் சிலரே இத்தகைய ஆசீர்வாதத்தைப் பெற்றனர். ஏன்? நிச்சயமாக, சந்தேகத்திற்கிடமில்லாமல் சிலருக்கே தேவையான விசுவாசம் இருந்தது என்பதே காரணம். பர்திமேயுவின் விஷயத்தில், அவன் கேட்டவுடனேயே அவனது விசுவாசத் திற்கான பதில் கிடைத்தது, உண்மையான விசுவாசத் திற்குரிய உறுதியான தன்மை; மேலும் அவன் பார்வை பெற்ற பிறகு ஆண்டவருக்கு பின்சென்றது, தேவனை மகிமைப்படுத்தியது போன்ற செயல்களில் அவன் நேர்மையான உள்ளம் கொண்டவன் என்பதற்கான ஆதாரத்தையும் கவனிக்கவும்.

மாறாக, அவன் தனக்குத்தானே இவ்வாறு சொல்லியிருக்கலாம், "ஆம், புது மாதிரியான களிம்புகள் மற்றும் ஒரு வார்த்தையைச் சொல்லி பார்வையை திரும்பச் செய்யக்கூடிய தீர்க்கதரிசி பற்றி நான் நிறைய கேள்விப்பட்டிருக்கிறேன், ஆனால் என் கருத்துப்படி இவை அனைத்தும் ஏமாற்று வேலைகள். எப்படியிருந்தாலும், அவை எனக்கானவை அல்ல. நான் செல்வந்தனாகவும் செல்வாக்கு மிக்கவனாகவும் இருந்திருந்தால், நான் அவருக்கு நல்ல கூலியை கொடுப்பேன் என்று அவன் நினைத்திருந்தால் அல்லது என் உறவினர்கள் சிலர் அவருக்கு நன்றாக பணம் கொடுக்க முடிந்திருந்தால், நாசரேத்தின் இந்த தீர்க்கதரிசி என்னை குணப்படுத்துவதில் மகிழ்ச்சியடைவார் என்று நினைத்திருக்கலாம். இல்லை, நான் எல்லா நம்பிக்கையையும் இழந்துவிட்டேன். எப்படியோ, இஸ்ரயேல் ஜனங்கள் நீண்ட காலமாக மேசியாவை எதிர்பார்த்துகொண்டிருக்கிறார்கள். அவர் என் காலத்தில் வருவார், நான் இருக்கும் இடத்தைக் கடந்து செல்வார், அவரிடத்தில் இரக்கம் வேண்டி நான் கூப்பிடுவது எதாவது பயனுண்டு என்பது மிகவும் சாத்தியமற்றது."

பார்வையற்ற மனிதன் விசுவாசமின்றி இவ்விதமாக பகுத்தாராய்ந்து கொண்டிருந்திருப்பானேயாகில், நிச்சயமாக ஊர்வலம் அவனைக் கடந்து சென்றிருக்கும், அவன் பார்வையற்றவனாகவே இருந்திருப்பான்.

## அறிவின் கண்கள் குருடாயின

சரீர ரீதியான பார்வையற்ற தன்மை ஒரு கொடிய துன்பம் என்பதை யாரும் மறுத்துச் சொல்ல மாட்டார்கள். ஆனால், நிலவி வரும் மனதின் குருட்டு தன்மை மற்றும் ஆவிக்குரிய குருட்டுத்தன்மையானது அதை விட எவ்வளவு தீவிரமானது. கர்த்தராகிய இயேசுவில் உண்மையான விசுவாசம் கொண்ட சிலரைத் தவிர, உலகம் முழுவதும் உள்ள அனைவருமே குருடர்கள் என்று வேத வாக்கியங்கள் நமக்குச் சொல்கின்றன. "அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்கள் மனதைக் குருடாக்கினான்." (2 கொரி. 4:4). தெய்வீக குணத்தின் மகத்துவத்தையும், மனுக்குலத்தின் இரட்சிப்பின் தெய்வீக திட்டத்தையும் பார்க்கும் திறனை தவறான போதனைகளால் இழந்து, குருட்டுத்தன்மையில் உள்ளவர்கள் அறுப்புண்டு போகிறார்கள். இந்த மனம் மற்றும் ஆவிக்குரிய குருட்டுத்தன்மையில் பல்வேறு அளவுகள் உள்ளன: சிலர் எதையும் பார்க்க முடியாது, மற்றவர்கள் கொஞ்சமாக, தெளிவற்று, மங்கலாகப் பார்க்க முடியும். சிலர் சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்களைப் பார்த்து, அவற்றை இயற்கை என்று அழைக்கப்படுவதைத் தவிர வேறு எதையும் காண முடியாது – இயற்கையை புத்திநுட்பமுள்ள வழிகாட்டுதல் இல்லாத வஸ்துக்களின் ஒரு கூட்டமைப்பு என்று காண்கின்றனர். தீர்க்கதரிசி சங். 19:2, 3-ல் "**பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவது மில்லை**" என்று அறிவிக்கிறார்; ஆனால், அந்தோ பரிதாபம்! ஜீவியத்தின் அனைத்து விஷயங்களிலும் தெய்வீக மேற்பார்வையை உணராத, இந்த விஷயங்களையெல்லாம் கேட்காத, பார்க்காத எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

கிருபையுள்ள, நீதியுள்ள, அன்பான, ஞானம் மற்றும் வல்லமை கொண்ட தேவனிடத்தில் விசுவாசம் இல்லாத இந்த குருடர்களும், செவிடர்களும், அவரது வார்த்தையில் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அன்பின் செய்திகளுக்கும் கிருபைக்கும் செவிகொடுக்க தயாராக இல்லை. அவர்களில் சிலருக்கு, ஒரு தனிப்பட்ட சிருஷ்டிகரைப் பற்றி சிந்திப்பது முட்டாள்தனமாகத் தோன்றுகிறது: மற்றவர்களுக்கு, உலகங்களை சிருஷ்டிக்கக்கூடிய அளவுக்கு வல்லமையுள்ள ஒருவர், நம் சந்ததியின் தனிப்பட்ட உறுப்பினர்களின் நலன்களுக்காக குறிப்பிட்ட கவனம் செலுத்துவார் என்று நினைப்பது முட்டாள்தனமானது என்கிறார்கள். அவர்கள் குருடர்கள், தூரத்திலுள்ளவைகளைப் பார்க்க முடியாது – தற்போதைய வாழ்க்கையின் விவகாரங்களை மட்டுமே அவர்களால் பார்க்க முடியும், அதில் புசித்தல், குடித்தல், நடுதல், கட்டுதல், சிரிப்பு, அழுகை, ஜீவன், மரணம் ஆகியவை அடங்கும். வேறு ஏதாவது இருக்கிறதா என்றோ அல்லது அது என்னவென்றேகூட அவர்களுக்குத் தெரியாது. அறிவின் கண்களை கொஞ்சம் திறந்திருக்கும் மற்றவர்கள், ஒரு தனிப்பட்ட தேவன்/இறைவன் இருக்கிறார் என்பதையும், அவர் நம்மீது தனிப்பட்ட ஆர்வம் காட்டுகிறார் என்பதையும் உணர்ந்து கொள்ள முடியும்; மறுபுறம், தெய்வீக வார்த்தையைப் பற்றிய எதிராளியின் தவறான சித்தரிப்புகளின் மூலம் இவர்கள் குருடர்களாக ஆக்கப்படுகிறார்கள், அவை தெய்வீக குணாம்சம் மற்றும் திட்டத்தைக் குறித்து தவறான கருத்துப்பதிவைத் தருகின்றன. தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் வாக்களித்த காலத்தை எவ்வளவு ஆவலுடன் எதிர்பார்க்கிறோம், அப்போது சிறியவன் முதல் பெரியவன் வரை எல்லோரும் அவரை அறிந்துகொள்வார்கள், குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போகும்.

## பர்திமேயுவின் அனுபவங்கள் எடுத்துக்காட்டானவைகள்

இந்த பாடத்தில் நம் முன் இருக்கும் சம்பவம், தற்போது பார்வையற்றோர் வகுப்பைச் சேர்ந்த சிலர் எவ்வாறு ஆண்டவரிடம் கொண்டு வரப்படுகிறார்கள், என்றும் அவர்களின் அறிவின் கண்கள் கிருபையால் எப்படி திறக்கப்படுகின்றன என்பதை விளக்குவதற்கு நன்றாகப் பயன்படுகிறது. கர்த்தருடைய பரிபாலனத்தினாலே, நசரேயனாகிய இயேசு கடந்து செல்வதை அவர்கள் கேட்கிறார்கள்; கர்த்தருடைய பரிபாலனத்தினாலே, அவர்கள் மாபெரும் போதகரைப் பற்றியும் நித்திய ஜீவனைப் பற்றியும் அவர் குருடர்களின் கண்களைத் திறப்பது பற்றியும் ஏதோ கேள்விப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, விசுவாசத்தால் ஆண்டவரை பற்றிக் கொள்கிறார்கள், "**தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்**" என்று கூப்பிடுகிறார்கள். அவருக்கு தங்களை அடையாளம் காட்டுவதற்கு அவர்கள் மிகவும் அற்பமானவர்கள், மிகவும் பாவம் செய்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்குத் தோன்றுகிறது. ஆனால் விசுவாசம் நிலைத்திருக்கிறது. மற்றவர்களிடம் அவர் காட்டிய இரக்கத்தைப் பற்றி அவர்கள் கேள்விப்பட்டிருக்கிறார்கள், மேலும் இறுதியில், அவர் அவர்களை வரச் சொல்லும் வரை, அவரை இன்னும் அதிகமாகக் கூப்பிடுகிறார்கள், "**என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை.**" (யோவா. 6:37).

இப்போது விசுவாசத்தின் மூலம் ஆண்டவரிடம் வருபவர்கள் அனைவரும் இந்த பாடத்தில் காட்டப்பட்டுள்ள பர்திமேயுவின் அனுபவத்தைப் போன்று சில எதிரான அனுபவங்களை எதிர்கொள்கின்றனர். பொதுவாக, அவர்களின் தேவையை உணர்ந்து ஆண்டவரை நோக்கி கூப்பிடும் வரை அவர்கள் ஊக்கமின்றி இருக்கிறார்கள். ஆனால் இவர்களும், அவர்களுக்கு உதவி செய்வதில்

மகிழ்ச்சி அடைபவர்களிடமிருந்து உதவியைப் பெறுகிறார்கள், திடன்கொள், எழுந்திரு, உன்னை அழைக்கிறார் என்று கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தரிடமிருந்து சத்திய வெளிச்சத்தைப் பெறுகிறார்கள்; அதன் மூலம் அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாக இருக்கிறதை அவர்களால் பார்க்க முடிகிறது, அவர் மூலமாகவே பிதாவைக் குறித்த அறிவைப் பெற வர முடியும், அவரை அறிவதே நித்திய ஜீவன். (யோவா. 17:3).

ஆனால், ஐயோ, இன்று பலரிடம், நீங்கள் என்ன செய்வீர்கள்? இந்த கேள்வியைக் கேட்டால் ஆவிக்குரிய தேவைகளின் அவசியத்தை உணராமல், செல்வத்தையோ அல்லது மனிதர்களின் கனத்தையோ அல்லது ஏதோ ஒருவிதமான உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையோ கோருகிறார்கள். தெய்வீக குணாம்சம் மற்றும் திட்டத்தைப் பார்க்க கண்கள் திறக்கப்பட்டு கணிசமான ஆசீர்வாதங்களை நம்மில் அனுபவித்தவர்களும் கூட, அப்போஸ்தலர் சபைக்காக ஜெபித்ததை நினைவில் கொள்ள வேண்டும். "**தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்: தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்குப் பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**" (எபே. 1:18,19).




## ஜனங்கள் அதைக் கண்டபோது

குருடனுக்கு பார்வை கிடைத்ததையும் அவன் இயேசுவைப் பின்பற்றுபவனாக மாறி, தேவனை மகிமைப்படுத்துகிறதையும் ஜனங்கள் கண்டபோது, அவர்களுடன் பார்த்த அனைவரும் சேர்ந்து துதித்தார்கள். இன்றும் நம் மத்தியிலும் அவ்வாறே இருக்கிறது. ஒருவருக்குப் பின் ஒருவராக, தெய்வீக குணம் மற்றும் திட்டத்தைப் பற்றிய அறிவுக்கு வரும்போது, ஆண்டவருடன் ஒத்துப்போகிற அனைவரும் அவர்களை ஆண்டவரிடம் அழைத்து வருவதற்கு மட்டுமல்லாமல், அவர்களுக்காக துதிப்பாடலை சேர்ந்து பாடவும், அவர்களின் ஆசீர்வாதத்தில் மகிழ்ச்சியடையவும் தயாராக இருக்கிறார்கள். இருப்பினும், இந்த பார்வையற்ற, குருட்டாட்டத்தில் இருந்து ஆவிக்குரிய பார்வை மற்றும் புரிதலுக்கான மாற்றத்தைப் பாராட்டாத மக்களின் பெரும்பான்மை கூட்டம், இப்போது தேவனை புகழ்வதிலும், நன்றி செய்வதிலும் இணைய முடியாது. எவ்வாறாயினும், வானத்திலும், பூமியிலும் உள்ள சகல சிருஷ்டிகளும், "***சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக***" (வெளி. 5:13) என்று சொல்வதை கேட்கும்போது எல்லா முழங்காலும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும் தேவனுடைய மகிமை பூமி முழுவதையும் நிரப்பும் காலம் வரும் என்று நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம்.

நமது பாடமானது, மனுஷகுமாரன் விசுவாசத்தினாலே தன்னிடம் வருகிற யாவருக்கும் இரட்சிப்பை அளிக்கும் வல்லமை உள்ளவர் என்பதை நிரூபிக்கும் இரண்டாவது விளக்கத்தை அளிக்கிறது. கர்த்தரும் மற்றும் அவருடனிருந்தவர்களும் எரிகோவை கடந்து எருசலேமை நோக்கி சென்று கொண்டிருந்தனர். நாசரேத்தின் மகா பெரிய தீர்க்கதரிசி எருசலேமுக்கு வருவதாக அறிந்ததால், முழு நகரமும் பரபரப்பாக இருந்தது. சகேயு வெளிப்படையாக பிரபலமான மற்றும் செல்வந்தரான குடிமகன்களில் ஒருவராகவும் ஆயக்காரனாகவும், (வரி வசூலிப்பவராக) இருந்தார். நமது ஆண்டவரின் காலத்தில் "publican"- "ஆயக்காரன்" என்ற வார்த்தை ரோம சாம்ராஜ்யத்திற்காக வரிகளை வசூலிப்பவரைக் குறிக்கிறது. இஸ்ரயேலர், ரோமர்களால் வரி விதிக்கப்படுவதை எதிர்த்தனர், அவர்களே தேவனுடைய ராஜ்யம் என்றும், ரோம தேசமும் மற்ற தேசங்களும் அவர்களுக்கு வரி செலுத்த வேண்டும் என்றும் உரிமை கோரினர். இந்த விஷயத்தில் தவறான அபிப்பிராயம் மிகவும் வலுவாக இருந்ததால், யூதர்களின் மதிப்புக்குரிய வகுப்பினர் இந்த பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

அதன் விளைவாக, ஆயக்காரன் என்பவன் மதச்சார்பற்ற, தேசபக்தியற்ற, நேர்மையற்ற குணாம்சமுடையவன் என்று அர்த்தம் கொள்ளப்பட்டது. பரிசேயர்கள் இவர்களை யூதர்களாகவோ அல்லது உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுக்கு சுதந்தரவாளிகளாகவோ கருதாமல் 'பாவிகள்' என்றழைத்து கனவீனப்படுத்தினர். வரி வசூலிப்பவர்கள் தங்களைப் பாவிகள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்று பாவித்து, சில சமயங்களில் ஆலயத்திற்கு ஜெபம் செய்யச் சென்றால், அவர்கள் மிகவும் மத நம்பிக்கை கொண்டவர்கள் என்றும் ஆயக்காரர்கள் அல்ல என்றும் தங்கள் மனிதத்தன்மை, மதம் மற்றும் தேசபக்தி எதையும் இழக்கவில்லை என்று தேவனுக்கு நன்றி செலுத்துவதை கேட்க முடிந்தது.

சகேயு பிரதான ஆயக்காரர்களில் ஒருவனாகவும், அவர்களுக்குள் பிரபலமானவனாகவும், செல்வந்தனாகவும் இருந்தான். இருந்தும் அவனது மனம் சஞ்சலப்படுவது போல் இருந்தது. அவனது தொழில் லாபகரமானதாக இருந்தபோதிலும், அவன் திருப்தியடையவில்லை. அவனது

செல்வங்கள் அனைத்தும் மோசடியால் ஈட்டப்பட்டது என்று ஒப்புக்கொள்ள மாட்டான் என்றாலும், அவற்றில் சில உண்மையான முறையிலும் மரியாதையான முறையிலும் பெறப்படவில்லை என்பதை அவன் உணர்ந்தான். இது பெரும்பாலான செல்வந்தர்களின் விஷயத்தில் உண்மை-யாக இருக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தையும் நாசரேத்தின் தீர்க்கதரிசியையும் அவரது அற்புத செயல்களையும் பற்றிக் கேள்விப்பட்டபோது, தேவனுடன் உறவு வைத்துக்கொள்ள அவனது மனம் ஏங்கியது – அவன் குறைந்தபட்சம் இந்த தீர்க்கதரிசியைப் பார்க்க விரும்பினான். அவன் உயரம் குறைந்தவனானபடியால், ஜனக்கூட்டம் அதிகமாக இருந்ததால், அவனுக்கு சரியான வாய்ப்பு கிடைக்கவில்லை, ஆனால் பவனியை முந்தி ஓடி, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறி, சாலைக்கு மேல் அதன் கிளைகளில் ஒன்றில் அமர்ந்தான், இயேசு அவனைக் கடந்து செல்லும்போது அவனால் அவரை நன்கு பார்க்க முடிந்தது (லூக். 19:1 – 4).

சகேயுவின் விஷயத்தில் இருந்தது போலவே, இன்றும் சிலர் நீதிக்கான விருப்பத்துடனும், தேவனுடனான இணக்கத்துடனும், ஆண்டவர் இயேசுவோடு ஐக்கியத்துடனும், ராஜ்யத்தில் நித்திய ஜீவனுக்கான எதிர்பார்ப்பு வாஞ்சை-யுடனும் வருகிறார்கள். அவர்கள் இந்த சிந்தனையை எந்த அளவுக்கு மனதில் ஊக்கமளிக்கிறார்கள் என்ற விதத்தைப் பொறுத்தே அமைகிறது! அவர்கள் அதை ஒதுக்கிவிட்டு, பிதாவுடன் மறுபடியும் இணக்கம் கொள்வது மற்றும் அவருடன் இணக்கமான வாழ்க்கையை பற்றி சிந்திப்பதில் எனக்கு எந்த பயனும் இல்லை; ஒரு புதிய பக்கத்தை திருப்ப முயற்சிப்பதில் எனக்கு எந்த பயனும் இல்லை. எனது தொழில் மதிப்பற்ற அடித்தளத்தில் கட்டப்பட்டுள்ளது; நான் ஏற்கனவே நேர்மையற்றவன் என்ற பெயரைப் பெற்றுள்ளேன், அதை நான் ஒருபோதும் துறக்க முடியாது. இந்த பெரிய போதகர் இயேசு பறைசாற்றும் புதிய ஜீவியம் அதை ஏற்றுக்கொள்ள கூடியவர்களுக்கு நிச்சயமாக மகத்தானது, ஆனால் நான் அவர்களில் ஒருவன் அல்ல. சகேயு இதுபோன்ற யோசனைகளையும் சாய்வுகளையும் பின்பற்றியிருந்தால், ஆண்டவரை மேலும் பார்க்க விரும்புவதற்கு பதிலாக வேறு திசையில் சென்றிருப்பார்.

ஆண்டவரைக் குறித்தோ, அவரது வார்த்தையைக் குறித்தோ அல்லது அவரது திட்டத்தைக் குறித்தோ தெளிவான கருத்துக்களைப் பெற விரும்பும் எவரையும் நாம் கண்டறிவது நம்பிக்கையான அறிகுறியாகும். அப்படிப்பட்ட யாவரையும் முன்னே சென்று காட்டத்தி மரத்தில் ஏறி, விஷயங்களை நன்கு பார்க்கும்படி புத்தி கூறுகிறோம்; ஒருவேளை, சகேயுவுக்கு நடந்தது போலவே, ஆண்டவர் அவர்களுக்கு சில ஆறுதலின் வார்த்தைகளையும் புத்துணர்ச்சியூட்டும் வார்த்தைகளையும் பேசக்கூடும். நேர்மையான இருதயமும், நோக்கத்தில் ஆர்வமும் உடையவர்களாக இருந்தால், அவர்களின் சில இயற்கை-யான குறைபாடுகள் ஆண்டவருடைய கிருபையின்கீழ், அவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாக அமையலாம் என்பதை இதுபோன்றவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். சகேயுவின் குறைந்த உயரம் மற்றவர்களை விட அவனை குறிப்பாக ஆண்டவருடைய கவனத்துக்கு கொண்டு-வந்ததைக் கண்டறிந்தார். ஆனால் அவனுடைய வைராக்கியமும், விருப்பமும், விசுவாசத்தின் வெளிப்பாடும் அவசியமாயிருந்தது.

## இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது


ஒரு காட்டத்தி மரக் கிளையின் மீது சகேயு அமர்ந்திருப்பதை நாம் கற்பனை செய்யலாம், கீழே ஆண்டவரைப் பார்த்து, அவரது முகத் தோற்றத்தை ஆராய்ந்து, இவர் கிறிஸ்துவா அல்லது இல்லையா என்று ஆச்சரியப்பட்டு, ஆண்டவருடைய குணத்துடன் ஒப்பிடும்-போது தனது அபூரணம் மற்றும் பரிசுத்தமற்ற தன்மையை உணர்ந்து இருதயத்தில் சோர்வடைந்திருக்கலாம். ஆனால் இது நமது எஜமானரின் குணத்திலிருந்து வேறுபட்டது. அவரது முகத்தில் தூய்மை, கனிவு, சாந்தம், பொறுமை, அன்பு பிரகாசித்து அதை பற்றி பேசியது. எஜமானர் நின்று, நேராக அவனது கண்களைப் பார்த்து, அவனது பெயரைச் சொல்லி, "***சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்***" (லூக். 19:5) என்ற போது அவன் எவ்வளவு ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும். மனிதனுக்குள் இருப்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார், அவர் மனிதர்களின் இருதயத்தை படிப்பதில் தவறியதே இல்லை என்பதற்கு இங்கே ஆதாரங்கள் உள்ளன. சகேயு உண்மையில் அவரை ஏற்றுக்கொள்வதில் மகிழ்ச்சியடைந்-தான், கீழே இறங்கி அவரை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரைந்தான். சந்தேகத்திற்கு இடமின்றி அந்த பகுதியில் மனிதர்களிடையே மதிப்புக்குரியவர்கள் மட்டுமல்லாமல் சகேயுவை விட மேலான மற்றும் உன்னத குணமுடைய வேறு சிலரும் இருந்திருப்பார்கள், ஆனால் நீதியின் மீது பசியும் தாகமும் கொண்ட ஏக்கமுள்ள இருதயம் சகேயுவுக்கு இருந்தது.

எஜமானர் அவனுடைய வீட்டிற்கு வருவதற்கான எத்தனை அற்புதமான வாய்ப்பு அது! எப்பேற்பட்ட கனம்! விலையேறப்பெற்ற வார்த்தைகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டுதல், உற்சாகமூட்டுதல் ஆகியவற்றைக் கேட்க எப்பேற்பட்ட ஓர் வாய்ப்பு! அந்த இரவு விருந்தின் போது நடந்த உரையாடல் அனைத்தும் பதிவு செய்யப்படவில்லை, ஆனால் பாடத்தை கற்றுக்கொடுப்பதற்கு போதுமானது சொல்லப்பட்டுள்ளது. கர்த்தர் அவனிடம் என்ன சொன்னாலும், சகேயு அங்கே தனது இருதயத்தை முழுவதுமாக ஒப்படைத்தான் – இனிமேல் அவன் பாவம், தீய பழக்கவழக்கங்கள் மற்றும் செயல்களை கைவிடுவதோடு மட்டுமல்லாமல், தவறான செயலுக்காகவும், அநீதிக்காகவும் முடிந்தவரை ஈடுசெய்வதாகவும் சொன்னான். இது ஆண்டவருடைய பார்வையில் மிகவும் முக்கியமானது. நமது அண்டை வீட்டாரிடமிருந்து ஏதாவது நேர்மையற்ற முறைகளில் பெற்ற பணத்தையோ சொத்தையோ வைத்துக்-

கொண்டு, நமது பாவங்களை மன்னிப்பதற்காக தேவனுடைய கிருபையைப் பயன்படுத்த முயற்சிப்பது வீணானது. சகேயு, "**நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்**" (லூக். 19:8 ASV) என்று அறிவித்த-போது நல்ல மனமாற்றத்திற்கான சான்று அளித்தான். நான் நாலத்தனையாக ஈடுசெய்தேன் என்றல்லாமல், நான் நாலத்தனையாக ஈடுசெய்வேன் என்றான். இங்கு கொடுக்கப்பட்ட தகவல் என்னவென்றால், சகேயு ஒரு ஆயக்காரனாக சாதாரணமான மனிதரை விட மேலான-வனாக இருந்தார், இல்லையெனில் நாலத்தனையாக ஈடுசெய்வது அவருடைய பெரும் செல்வத்தை அழித்து-விட்டிருக்கும். மாறாக, சகேயு தனது சொத்துகளில் பாதியை ஏழைகளுக்குக் காணிக்கையாக அர்ப்பணித்தார், மீதமுள்ளவற்றில் இருந்து அவர் மற்றவர்களிடமிருந்து அநியாயமாக எடுத்த அனைத்திற்கும் நாலத்தனையாக, அதாவது நான்கு மடங்கு அதிகமாக, என்றாலும், வாழ்வதற்கான போதுமான வழிமுறைகள் மீந்திருக்கும் என்று அவன் நம்பினான்.

இன்று பலர் சகேயுவின் பாதையை முழுமையாகப் பின்பற்றுவதில்லை; உண்மையிலேயே, நியாயமாக மற்றவருக்குச் சொந்தமான ஏதோ ஒன்றைத் தொடர்ந்து பிடித்துக்கொள்கிறார்கள், இரண்டாவதாக, அவர்கள் தங்களுடைய செல்வங்களான பணம், சொத்து, நேரம் அல்லது திறமைகளை கர்த்தருக்கு அதிகமாக அர்ப்பணிப்ப-தில்லை என்பதிலும் பெரும் தவறு செய்கிறார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். சகேயு ஒரு யூதன், நியாயப் பிரமாணத்தின் தேவைகளின் கீழ் அவனது ஆண்டு வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை மத சம்பந்தமான காரியங்களுக்கு ஒப்படைக்க வேண்டியது அவனுடைய கடமையாக இருந்தது. ஆனால் அவன் இதை விட அதிகமாக தனது ஆண்டு வருமானத்தில் பாதி மட்டுமல்ல, தன்னிடம் இருந்த அனைத்து பணம், சொத்து மற்றும் பொருட்கள் அனைத்திலும் பாதியை கொடுத்தான். சகேயு என்ற யூதனுக்கும் புறஜாதியினரான நமக்கும் இடையே உள்ள வேறுபாட்டை நாம் உணர்கிறோம், பெந்தேகொஸ்தே நாளுக்கு பின்பு வாழும் நாம், கர்த்தருக்கு அனைத்தையும் அர்ப்பணிப்பவர்கள், அவருடைய ஊழியத்தில் நாளுக்கு நாள் நமது புரிந்துகொள்ளுதலுக்கு ஏற்ப அவை அனைத்தையும் பயன்படுத்தும்படி அவரால் உக்கிராண-காரர்களாக மாற்றப்படுகிறோம்.

கிருபையிலும், அறிவிலும், அன்பிலும், நமது ஆண்டவரின் குணத்தைப் போன்று வளர விரும்பும் அனைவராலும் இந்தக் கேள்வி உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் - நான் பாவத்தையும் பாவ வழிகளையும் அநியாயத்தையும் விட்டுவிட்டேனா? சக சிருஷ்டிகளுக்குச் செய்த ஒவ்வொரு தீமைக்கும் நான் முடிந்தவரை போதுமான ஈடுசெய்துள்ளேனா? ஆண்டவருக்கும் அவருடைய காரியத்திற்கும் நான் பலிதியாகம் செலுத்தியிருப்பது, என்





பொருட்களில் பாதியையா அல்லது என் பொருட்களில் அனைத்தையுமா? ஒரு கிறிஸ்தவனாக நான் அனைத்தை-யும் பலிதியாகம் செய்திருந்தால், அந்த வாக்குறுதியை, அந்த உடன்படிக்கையை, அந்த பலிதியாகத்தை நான் எப்படி கடைப்பிடித்து வருகிறேன்? பணம் மட்டுமல்லாமல் நேரம், திறமை மற்றும் செல்வாக்கு அவருக்குச் சொந்தமானது என்பதையும், அவை என் நியாயமான சேவை என்பதையும் நான் நினைவில் கொள்கிறேனா? நான் ஒவ்வொரு நாளும் செலவு செய்து, மற்றும் செலவழிக்கப்பட்டு வருகிறேனா இல்லையா? எஜமான் அவருடைய ஜனங்களிடத்தில் கணக்குத் தீர்க்கும்போது என் நிலை என்னவாக இருக்கும்? என் கணக்கைச் சமர்ப்பிப்பதில் எனக்கு மகிழ்ச்சி இருக்குமா, அல்லது துக்கத்துடன் ஒரு உக்கிராணக்காரனாக நான் நேர்மையற்றவனாக இருந்தேனா, என் திறமைகளை பூமிக்குரிய நோக்கங்கள், பொருள்கள், லட்சியங்கள் மற்றும் சேவைகளில் புதைத்துவிட்டேன் என்று துக்கத்துடன் ஒப்புக்கொள்ள நேரிடுமா அல்லது நான் ஆண்டவருக்கு என் உழைப்பின் பலன்களையும் பலிதியாகத்தையும் சமர்ப்பிக்க முடியுமா, "**நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக் காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி**" என்று அவர் சொல்வதை கேட்க முடியுமா?

## "அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்"

தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் சொன்ன வார்த்தை-களை நினைவில் கொள்வோம், "**பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்**" (சங். 50:5), "**என் சம்பத்தை நான் சேர்க்கும் நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**" (மல். 3:17).

பார்வையற்ற பிச்சைக்காரன் காரியத்தில் மிகவும் மகிழ்ந்திருந்த கூட்டத்தாரில் சிலர், இயேசு அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆயக்காரனுடன் - வரி வசூலிப்பவருடன் நட்பு பாராட்டுவதைப் பார்த்து, பெரிதும் ஏமாற்றமடைந்தனர். அவர்கள் தவறான எண்ணங்களைக் கொண்டிருந்தார்கள் என்பதும், கர்த்தர் இருதயத்தை பார்க்கிறார் என்பதையும், ஆண்டவருடைய பார்வையில் இந்த தாழ்மையான மற்றும்

நன்றியுள்ள ஆயக்காரன் ராஜ்யத்திற்கு தங்களைக் காட்டிலும் அருகில் இருந்தான் என்பதையும் இன்னும் கவனிக்கவில்லை என்பதே பிரச்சனை. இயேசு அவர்களிடம், "**இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது**" (லூக். 19:9) என்றார். சகேயுவும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. "**இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்**" (லூக். 19: 10). அவனுடைய வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது - ஆனால் முழுமையான அர்த்தத்தில் இல்லை. ஏனென்றால், அப்போஸ்தலர் சொல்வது போல், அது நமது ஆண்டவரும் இரட்சகருமானவர் இரண்டாம் வருகையில் வெளிப்படும் போது நமக்குக் கொண்டு வரப்படும். ஆனால் அவனுடைய இருதயம் பாவத்திலிருந்தும் சுயநலத்திலிருந்தும் விலகி தேவனை நோக்கியும் மற்றும் நீதியை நோக்கியும் திருப்பப்பட்டது என்ற அர்த்தத்தில் அவனுக்கு இரட்சிப்பு கிடைத்தது. அந்த நாளில் சகேயு, ஆண்டவருடைய கிருபை, ஆசீர்வாதம் மற்றும் கட்டளையின்கீழ், தன் சொந்த ஒத்துழைப்புடன், ஒரு புதிய பக்கத்தை திருப்புவதிலும் இயேசுவின் போதனைகளைப் பின்பற்றுபவனாக மாறுவதன் மூலமும், இரட்சிக்கப்பட்டவனாக எண்ணப்பட்டான். இனிமேல் அவன் பாவ வழிகளை விரும்பாமல், நீதியின் வழிகளை விரும்பினான். இனி அவன் மாம்சத்தின் காரியங்களுக்குப் பின்னால், நடவாமல் ஆனால் இப்போது ஆவியின் காரியங்களை, தேவனுடைய காரியங்களை, நீதியின் காரியங்களை, சத்தியத்தின் காரியங்களை, எஜமானருக்கு மிகவும் பிரியமான காரியங்களை பின்பற்றி அவரது அடிச்சுவடுகளில் நடந்து கொண்டிருந்தான். ***



# வேதாகமம் பேசுகிறது

BIBLE TALKS

**ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்**

## யாக்கோபு ராகேல்
## ஆதி. 28:1-5, 10—29:23, 25-30; 30:13,17-21,23,25-36; 31:9, 17-32,34,36-46,48-55

ஈசாக்கு யாக்கோபை அழைத்து அவனை ஆசீர்வதித்து நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், எழுந்து புறப்பட்டு, பதான் அராமிலிருக்கிற உன் தாயினுடைய தகப்பனாகிய பெத்துவேலுடைய வீட்டுக்குப் போய், அவ்விடத்தில் உன் தாயின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளுக்குள் பெண் கொள் என்று அவனுக்கு கட்டளையிட்டான். சர்வ வல்லமையுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து நீ பல ஜனக் கூட்டமாகும்படி உன்னைப் பலுகவும் பெருகவும் பண்ணி; தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக் கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவராக என்று சொல்லி;

ஈசாக்கு யாக்கோபை அனுப்பிவிட்டான். அப்பொழுது அவன் பதான் அராமிலிருக்கும் சீரிய தேசத்தானான் பெத்துவேலுடைய குமாரனும், தனக்கும் ஏசாவுக்கும் தாயாகிய ரெபெக்காளின் சகோதரனுமான லாபானிடத்துக்குப் போகப் புறப்பட்டான்.

யாக்கோபு பெயர்செபாவை விட்டு புறப்பட்டு ஆரானுக்குப் போகப் பிரயாணம் பண்ணி, ஒரு இடத்திலே வந்து, சூரியன் அஸ்தமித்தப்படியினால், அங்கே இராத்தங்கி, அவ்விடத்துக் கற்களில் ஒன்றை எடுத்து, தன் தலையின் கீழ் வைத்து, அங்கே நித்திரை செய்யும்படி படுத்துக் கொண்டான். அங்கே அவன் ஒரு சொப்பனங்கண்டான்; இதோ ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது, அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது, அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்தார்கள்.

அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று: நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப் போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும், வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்த தேசத்துக்கு உன்னைத் திரும்பி வரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்.

யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்த போது, மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்றான். அவன் பயந்து இந்த ஸ்தலம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது! இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல, இது வானத்தின் வாசல் என்றான்.

அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின் மேல் எண்ணெய் வார்த்து. அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான்; அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது. அப்பொழுது யாக்கோபு: தேவன் என்னோட இருந்து, நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி, உண்ண ஆகாரமும், உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து, என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால், கர்த்தர் எனக்குத் தேவனாயிருப்பார்; நான் தூணாக நிறுத்தின இந்தக் கல் தேவனுக்கு வீடாகும்; தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன் என்று சொல்லிப் பொருத்தனை பண்ணிக் கொண்டான். இவ்வாறாக யாக்கோபு கர்த்தருடன் உடன்படிக்கை செய்தான்.

## கிணற்றின் அருகே மூன்று ஆட்டுமந்தைகள்

யாக்கோபு பிரயாணம் பண்ணி, கீழ்த்திசையாரின்

தேசத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே வயல்வெளியிலே ஒரு கிணற்றையும், அதின் அருகே மடக்கியிருக்கிற மூன்று மந்தைகளையும் கண்டான்; அந்த கிணற்றிலே மந்தைகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; அந்த கிணற்றின் வாய் ஒரு பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் மந்தைகள் எல்லாம் சேர்ந்தபின் கிணற்றின் வாயிலிருக்கும் கல்லை மேய்ப்பர் புரட்டி, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, மறுபடியும் கல்லை முன்னிருந்த கிணற்றின் வாயில் வைப்பார்கள்.

யாக்கோபு அவர்களைப் பார்த்து: சகோதரரே, நீங்கள் எவ்விடத்தார் என்றான்; அவர்கள், நாங்கள் ஆரான் ஊரார் என்றார்கள். அப்பொழுது அவன்; நாகோரின் குமாரனாகிய லாபானை அறிவீர்களா என்று கேட்டான்; அறிவோம் என்றார்கள். அவன் சுகமாயிருக்கிறானா என்று விசாரித்தான்; அதற்கு அவர்கள்: சுகமாயிருக்கிறான்; அவன் குமாரத்தியாகிய ராகேல், அதோ, ஆடுகளை ஓட்டிக் கொண்டு வருகிறாள் என்று சொன்னார்கள். அப்பொழுது அவன்: இன்னும் வெகுபொழுதிருக்கிறதே இது மந்தைகளைச் சேர்க்கிற வேளை அல்லவே, ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி, இன்னும் மேயவிடலாம் என்றான். அதற்கு அவர்கள்: எல்லா மந்தைகளும் சேருமுன்னே அப்படிச் செய்யக் கூடாது; சேர்ந்தபின் கிணற்றின் வாயிலுள்ள கல்லைப் புரட்டுவார்கள்; அப்பொழுது ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவோம் என்றார்கள்.

அவர்களோடே அவன் பேசிக் கொண்டிருக்கும் போதே தன் தகப்பனுடைய ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த ராகேல் அந்த ஆடுகளை ஓட்டிக் கொண்டு வந்தாள். யாக்கோபு தன் தாயின் சகோதரனான லாபானுடைய குமாரத்தியாகிய ராகேலையும், தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்ட போது, யாக்கோபு போய் கிணற்றின் வாயிலிருந்து கல்லைப் புரட்டி, தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளையும் கண்டபோது, யாக்போபு போய், கிணற்றின் வாயிலிருந்த கல்லைப் புரட்டி, தன் தாயின் சகோதரனாகிய லாபானின் ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டினான். பின்பு யாக்கோபு ராகேலை முத்தஞ் செய்து, சத்தமிட்டு அழுது, தான் அவள் தகப்பனுடைய மருமகனென்றும், ரெபெக்காளின் குமாரனென்றும் ராகேலுக்கு அறிவித்தான். அவள் ஓடிப்போய்த் தன் தகப்பனுக்கு அறிவித்தாள்.

லாபான் தன் சகோதரியின் குமாரனாகிய யாக்கோபுடைய செய்தியைக் கேட்ட போது, அவனுக்கு எதிர்கொண்டோடி, அவனைக் கட்டிக் கொண்டு முத்தஞ் செய்து, தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனான்; அவன் தன் காரியங்களையெல்லாம் விவரமாய் லாபானுக்குச் சொன்னான். அப்பொழுது லாபான்: நீ என் எலும்பும் என் மாம்சமுமானவன் என்றான். ஒரு மாதம் வரைக்கும் யாக்கோபு அவனிடத்தில் தங்கினான்.

## ராகேல் யாக்கோபினுடைய மனைவியாகிறாள்

பின்பு லாபான் யாக்கோபை நோக்கி: நீ என் மருமகனாயிருப்பதினால், சும்மா எனக்கு வேலை செய்யலாமா? சம்பளம் எவ்வளவு கேட்கிறாய், சொல்? என்றான். லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள்; மூத்தவள் பேர் லேயாள், இளையவள் பேர் ராகேல். லேயாளுடைய கண்கள் கூச்சப்பார்வையாயிருந்தது; ராகேலோ ரூபவதியும் பார்வைக்கு அழகானவளுமாயிருந்தாள். யாக்கோபு ராகேல் பேரில் பிரியப்பட்டு: உம்முடைய இளைய குமாரத்தியாகிய ராகேலுக்காக உம்மிடத்தில் ஏழு வருஷம் வேலை செய்கிறேன் என்றான். அதற்கு லாபான்: நான் அவளை அந்நிய புருஷனுக்குக் கொடுக்கிறதைப் பார்க்கிலும், அவளை உனக்குக் கொடுக்கிறது உத்தமம், என்னிடத்தில் தரித்திரு என்றான். அந்தபடியே யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான்; அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்கு கொஞ்ச நாளாகத் தோன்றினது.

லாபான் விருந்து பண்ணினான்; அன்று இரவிலே அவன் தன் குமாரத்தியாகிய லேயாளை அழைத்து கொண்டு போய், அவனிடத்தில் விட்டான்; காலையிலே, ராகேலுக்கு பதிலாக அவனுக்கு லேயாள் கொடுக்கப்பட்டதை யாக்கோபு அறிந்த போது, அவன் லாபானை நோக்கி, ஏன் எனக்கு இப்படி செய்தீர்? ராகேலுக்காக அல்லவா உம்மிடத்தில் வேலை செய்தேன்; பின்னை ஏன் எனக்கு வஞ்சகம் பண்ணிணீர் என்றான். அதற்கு லாபான்: மூத்தவள் இருக்க இளையவளைக் கொடுப்பது இவ்விடத்து வழக்கம் அல்ல. ராகேலையும் உனக்குத் தருவேன்; ராகேலுக்காகவும் நீ இன்னும் ஏழு வருஷம் என்னிடத்தில் வேலை செய் என்றான் தன் குமாரத்திராகிய ராகேலையும் அவனுக்கு மனைவியாகக் கொடுத்தான். யாக்கோபு லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அவன் அதிகமாய் நேசித்து, பின்னும் ஏழு வருஷம் அவனிடத்தில் சேவித்தான்.

லேயாள், ரூபன், சிமியோன், லேவி, யூதா என்று நான்கு குமாரர்கள் பெற்ற போது, ராகேல் இன்னும் பிள்ளை இல்லாதிருந்தாள். ராகேல் தன் சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, யாக்கோபை நோக்கி: எனக்குப் பிள்ளை கொடும், இல்லாவிட்டால் நான் சாகிறேன் என்றாள். அப்பொழுது யாக்கோபு ராகேலின் மேல் கோபங்கொண்டு: தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார். நான் தேவனோ? என்றான். அவள் அவளுடைய வேலைக் காரியாகிய பில்காளை மனைவியாக கொடுத்தாள், பில்காள் யாக்கோபுக்கு தாண், நப்தலி என இரண்டு குமாரர்களை பெற்றாள். பின்பு லேயாள் தன் வேலைக்காரியாகிய சில்பாளை யாக்கோபுக்கு மனைவியாக கொடுத்தாள். சில்பாள் யாக்கோபுக்கு காத், ஆசேர் என்ற இரண்டு குமாரர்களை பெற்றாள். பின்பு லேயாள், இசக்கார், செபுலோன் பெற்றாள், ஒரு குமாரத்தியாகிய அவளுக்கு தீனாள் என்று பெயரிட்டாள். நீண்ட காலத்திற்கு பின்னர், ராகேலுடைய நிந்தையை நீக்கி, ஒரு குமாரனை பெற்று, அவனுக்கு யோசேப்பு என்று பேரிட்டாள்.

## லாபானுடைய ஆட்டு மந்தைகள் பிரிக்கப்பட்டது

ராகேல் யோசேப்பைப் பெற்ற பின், யாக்கோபு லாபானை நோக்கி: நான் என் ஸ்தானத்திற்கு என் தேசத்திற்கும் போக என்னை அனுப்பிவிடும் நான் உமக்கு ஊழியஞ் செய்து சம்பாதித்த என் மனைவிகளையும் என்

பிள்ளைகளையும் எனக்குத் தாரும்; நான் போவேன், நான் உம்மிடத்தில் சேவித்த சேவகத்தை நீர் அறிந்திருக்கிறீர் என்றான். அப்பொழுது லாபான்: உன் கண்களில் எனக்குத் தயவு கிடைத்ததேயானால் நீ இரு; உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தார் என்று குறிப்பினால் அறிந்தேன். உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் என்றான். அதற்கு அவன்: நான் உம்மைச் சேவித்த விதமும் உம்முடைய மந்தை என்னிடத்தில் இருந்த விதமும் அறிந்திருக்கிறீர். நான் வருமுன்னே உமக்கு இருந்தது கொஞ்சம்; நான் வந்த பின் கர்த்தர் உம்மை ஆசீர்வதித்ததினால் அது மிகவும் பெருகியிருக்கிறது; இனி நான் என் குடும்பத்திற்கு சம்பாத்தியம் பண்ணுவது எப்பொழுது என்றான்.

அதற்கு அவன்: நான் உனக்கு என்ன தர வேண்டும் என்றான்; யாக்கோபு: நீர் எனக்கு ஒன்றும் தரவேண்டியதில்லை; நான் சொல்லுகிறபடி நீர் எனக்கு செய்தால் உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்த்துக் காப்பேன். நான் இன்றைக்கு போய், உம்முடைய மந்தைகளையெல்லாம் பார்வையிட்டு, அவைகளில் புள்ளியும் வரியும் கருப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் பிரித்து விடுகிறேன்; அப்படிப்பட்டவை இனி எனக்கு சம்பளமாயிருக்கட்டும். அப்படியே இனிமேல் என் சம்பளமாகிய இவற்றை நீர் பார்வையிடும் போது, என் நீதி விளங்கும்; புள்ளியும் வரியுமில்லாத வெள்ளாடுகளும், கறுப்பான செம்மறியாடுகளும் என் வசத்தில் இருந்தால், அவையெல்லாம் என்னால் திருடிக் கொள்ளப்பட்டவைகளாய் எண்ணப்படட்டும் என்றான்.

அதற்கு லாபான்: நீ சொன்னபடியே ஆகட்டும் என்று சொல்லி, அந்நாளிலே கலப்பு நிறமும் வரியுமுள்ள வெள்ளாட்டுக் கடாக்களையும், புள்ளியும் வரியுமுள்ள வெள்ளாடுகள் யாவையும், சற்று வெண்மையும் கருமையுமுள்ள செம்மாறியாடுகள் யாவையும் பிரித்து, தன் குமாரரிடத்தில் ஒப்புவித்து, தனக்கும் யாக்கோபுக்கும் இடையிலே மூன்று நாள் பிரயாணதூரத்தில் இருக்கும்படி வைத்தான்.லாபானுடைய மற்ற ஆடுகளை யாக்கோபு மேய்த்தான், வயல்வெளிகளில் லாபானுக்கு ஊழியஞ் செய்தான்.

## கானான் தேசத்திற்கு யாக்கோபு திரும்ப போகுதல்

பின்பு, லாபானுடைய குமாரர்; எங்கள் தகப்பனுக்கு உண்டானவைகள் யாவையும் யாக்கோபு எடுத்துக் கொண்டான் என்றும், எங்கள் தகப்பனுடைய பொருளினாலே இந்தச் செல்வத்தையெல்லாம் அடைந்தான் என்றும் சொன்ன வார்த்தைகளை யாக்கோபு கேட்டான். லாபானின் முகத்தை யாக்கோபு பார்த்தபோது, அது நேற்று முந்தைநாள் இருந்தது போல் இராமல் வேறுபட்டிருக்கக் கண்டான். கர்த்தர் யாக்கோபை நோக்கி: உன் பிதாக்களுடைய சேதத்திற்கும் உன் இனத்தாரிடத்திற்கும் நீ திரும்பிப் போ; நான் உன்னோடே கூட இருப்பேன் என்றார்.

அப்பொழுது யாக்கோபு, ராகேலையும் லேயாளையும் வெளியிலே தன் மந்தையிடத்தில் அழைப்பித்து, அவர்களை நோக்கி: உங்கள் தகப்பனுடைய முகம் நேற்று முந்தை நாள் இருந்தது போல இருக்கவில்லை என்று எனக்கு தோன்றுகிறது; ஆனாலும் என் தகப்பனுடைய தேவன் என்னோடே கூட இருக்கிறார். என்னால் இயன்றமட்டும் நான் உங்கள் தகப்பனுக்கு ஊழியஞ் செய்தேன் என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

உங்கள் தகப்பனே, என்னை வஞ்சித்து, என் சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினான்; ஆனாலும் அவன் எனக்குத் தீங்கு செய்ய தேவன் அவனுக்கு இடங்கொடுக்கவில்லை புள்ளியுள்ளவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் புள்ளியுள்ள குட்டிகளைப் போட்டது; கலப்பு நிறமானவைகள் உன் சம்பளமாயிருக்கும் என்று அவன் சொன்னபோது, ஆடுகளெல்லாம் கலப்பு நிறக் குட்டிகளைப் போட்டது. இவ்விதமாய் தேவன் உங்கள் தகப்பனுடைய ஆடுகளை எடுத்து, எனக்குத் தந்தார்.

அப்பொழுது யாக்கோபு எழுந்து, தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள் மேல் ஏற்றி, தான் பதான் அராமலே சம்பாதித்த மிருக ஜீவன்களாகிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, கானான் தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்குப் போகப் புறப்பட்டான். லாபான், தன் ஆடுகளை மயிர்க்கத்தரிக்க போயிருந்தான்; அந்த சமயத்திலே ராகேல் தன் தகப்பனுடைய சுரூபங்களைத் திருடிக் கொண்டாள். யாக்கோபு தான் ஓடிப்போகிறதைச் சீரியனாகிய லாபானுக்கு அறிவியாமல், திருட்டளவாய் போய்விட்டாள். இப்படியே அவன் தனக்கு உண்டானவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு, ஆற்றைக் கடந்து கீலேயாத் மலையை நோக்கி ஓடிப்போனான்.

யாக்கோபு ஓடிப்போனது மூன்றாம் நாளிலே லாபானுக்கு அறிவிக்கப்பட்டது. அப்பொழுது அவன், தன் சகோதரரைக் கூட்டிக் கொண்டு, ஏழு நாள் பிரயாணம் பரியந்தம் அவனை தொடர்ந்து போய், கீலேயாத் மலையிலே அவனை கண்டுபிடித்தான். அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்கு சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையை அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்.

லாபான் யாக்கோபினிடத்தில் வந்தான்; யாக்கோபு மலையிலே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்; லாபானும் தன் சகோதரரோடேகூடிக் கீலேயாத் மலையிலே கூடாரம் போட்டான். அப்பொழுது லாபான் யாக்கோபை நோக்கி : நீ திருட்டளவாய்ப் புறப்பட்டு, என் குமாரத்திகளை யுத்தத்தில் பிடித்த சிறைகளைப் போலக் கொண்டுவந்தது என்ன செய்கை? நீ ஓடிப்போவதை மறைத்து, எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்து விட்டது என்ன? நான் உன்னை சந்தோஷமாய், சங்கீதம் மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே என் பிள்ளைகளையும் என் குமாரத்திகளையும் நான் முத்தஞ் செய்ய விடாமல் போனதென்ன? இந்த செய்கையை நீ மதியில்லாமல் செய்தாய் உங்களுக்குப் பொல்லாப்புச் செய்ய எனக்கு வல்லமை உண்டு ஆகிலும், உங்கள்

தகப்பனுடைய தேவன்; நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்று நேற்று ராத்திரி என்னோடே சொன்னார். இப்பொழுது உன் தகப்பனுடைய வீட்டின் மேலுள்ள வாஞ்சையினால் நீ புறப்பட்டுப் போகிறதானால் போகலாம், என் தெய்வங்களை ஏன் திருடிக் கொண்டு போகிறாய் என்று கேட்டான்.

யாக்கோபு லாபானுக்கு பிரதியுத்திரமாக உம்முடைய குமாரத்திகளைப் பலாத்காரமாய்ப் பிடித்து வைத்து கொள்வீர் என்று நான் அஞ்சினதினாலே இப்படி வந்து விட்டேன். ஆனாலும் யாரிடத்தில் உம்முடைய தெய்வங்களைக் கண்டுபிடிக்கிறீரோ, அவனை உயிரோடே விட வேண்டாம்; உம்முடைய பொருள்கள் எதாவது என் வசத்தில் உண்டா–னால் நீர் அதை நம்முடைய சகோதரருக்கு முன்பாக பரிசோதித்தறிந்து, அதை எடுத்துக் கொள்ளும் என்றான். ராகேல் அவைகளை திருடிக் கொண்டு வந்ததை யாக்கோபு அறியாதிருந்தான். மேலும் லாபான் சொரூபங்களை தேடியும் கண்டுபிடிக்கவில்லை.

அப்பொழுது யாக்கோபுக்குக் கோபம் எழும்பி, லாபானோடே வாக்குவாதம் பண்ணி; நீர் என்னை இவ்வளவு உக்கிரமாய்த் தொடர்ந்து வரும்படிக்கு நான் செய்த தப்பிதம் என்ன? நான் செய்த துரோகம் என்ன? என் தட்டுமுட்டுகளையெல்லாம் தடவிப்பார்த்தீரே; உம்முடைய வீட்டுத் தட்டுமுட்டுகளில் என்னத்தைக் கண்டு பிடித்தீர்? அதை என்னுடைய சகோதரருக்கும் உம்முடைய சகோதர ருக்கும் முன்பாக இங்கே வையும்; அவர்கள் எனக்கும் உமக்கும் நடுத்தீர்க்கட்டும். இந்த இருபது வருஷகாலமாய் நான் உம்மிடத்தில் இருந்தேன்; உம்முடைய செம்மறியாடு களும் வெள்ளாடுகளும் சினையழியவில்லை; உம்முடைய மந்தையின் கடாக்களை நான் தின்னவில்லை. பீறுண்டதை நான் உம்மிடத்துக்குக் கொண்டுவராமல், அதற்காக நான் உத்திரவாதம் பண்ணினேன்; களவு போனதையும் என் கையில் கேட்டு வாங்கினீர்.

பகலிலே வெயிலும் இரவிலே குளிரும் என்னை பட்சித்தது; நித்திரை என் கண்களுக்கு தூரமாயிருந்தது; இவ்விதமாய் பாடுபட்டேன். இந்த இருபது வருஷ காலம் உம்முடைய வீட்டிலே இருந்தேன்; பதினாலு வருஷம் உம்முடைய இரண்டு குமாரத்திகளுக்காகவும், ஆறு வருஷம் உம்முடைய மந்தைக்காகவும் உம்மிடத்தில் சேவித்தேன்; பத்துமுறை என் சம்பளத்தை மாற்றினீர். என் பிதாவின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் பயபக்திக்குரியவரும் என்னோடிராமற்போனால், நீர் இப்பொழுது என்னை வெறுமையாய் அனுப்பிவிட்டிருப்பீர்; தேவன் என் சிறுமையையும் என் கைப்பிரயாசத்தையும் பார்த்து, நேற்று ராத்திரி உம்மைக் கடிந்து கொண்டார் என்று சொன்னான்.

## லாபான் மற்றும் யாக்கோபு இடையே உடன்படிக்கை

அப்பொழுது லாபான் யாக்கோபுக்குப் பிரதியுத்தர–மாக: இந்தக் குமாரத்திகள் என் குமாரத்திகள், இந்த பிள்ளைகள் என் பிள்ளைகள், இந்த மந்தை என் மந்தை; நீ காண்கிற யாவும் என்னுடையவைகள்; என் குமாரத்தி–களாகிய இவர்களையும், இவர்கள் பெற்ற பிள்ளைகளையும் இன்று நான் என்ன செய்யக் கூடும்? இப்பொழுதும் எனக்கும் உனக்கும் சாட்சியாயிருக்கும் பொருட்டு, நீயும் நானும் உடன்படிக்கை பண்ணிக் கொள்ளக்கடவோம் என்றான். அப்பொழுது யாக்கோபு ஒரு கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தினான். பின்னும் யாக்கோபு தன் சகோதர–ரைப் பார்த்து, கற்களைக் குவியலாகச் சேருங்கள் என்றான்; அவர்கள் கற்களை எடுத்துக் கொண்டு வந்து, ஒரு குவிய–லாக்கி, அந்தக் குவியலின் மேல் போஜனம் பண்ணினார் கள். இந்த குவியல் இன்று எனக்கு உனக்கும் சாட்சி என்று லாபான் சொன்னபடியினாலே அதின் பேர் கலயெத் மற்றும் மிஸ்பா என்றும் பேர் பெற்றது. அல்லாமலும் அவன்: நாம் ஒருவரை ஒருவர் விட்டு மறைந்தபின், நீ என் குமாரத்தி–களைத் துயரப்படுத்தி, அவர்களையல்லாமல் வேறே ஸ்திரீகளை விவாகம் பண்ணினாயானால், கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்; நம்முடனே ஒரு–வரும் இல்லை; பார், தேவனே எனக்கும் உனக்கும் சாட்சி.

பின்னும் லாபான் யாக்கோபை நோக்கி : இதோ, இந்தக் குவியலையும் எனக்கும் உனக்கும் நடுவாக நான் நிறுத்தின தூணையும் பார். தீங்கு செய்ய நான் இந்தக் குவியலைக் கடந்து உன்னிடத்துக்கு வராதபடிக்கும், நீ இந்த குவியலையும், இந்த தூணையும் கடந்து என்னிடத்துக்கு வராதபடிக்கு இந்தக் குவியலும் சாட்சி, இந்த தூணும் சாட்சி. ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறவர் நமக்குள்ளே நடுநின்று நியாயந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர் மேல் ஆணை–யிட்டான். பின்பு, யாக்கோபு மலையின் மேல் பலியிட்டு, போஜனம் பண்ணும்படி தன் சகோதரரை அழைத்தான்; அப்படியே அவர்கள் போஜனம் பண்ணி மலையிலே இராத்–தங்கினார்கள். லாபான் அதிகாலமே எழுந்திருந்து, தன் குமாரரையும் தன் குமாரத்திகளையும் முத்தஞ் செய்து, அவர்களை ஆசீர்வதித்தான். பின்பு லாபான் புறப்பட்டு போனான்.

***

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Laymen's Home Missionary Movement

Bro. V. Vincent Jeyakumar

[Representative of India]

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY